பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 25 புதன்கிழமை 08.05.2024 கதிர் 182

# உண்மை அறியும் குழுவை நம்ப தமிழர்கள் தயாரில்லை

## நாடாளுமன்றில் சுமந்திரன் எடுத்துரைப்பு
## அரசு ரோம் சட்டத்தை ஏற்கவும் வலியுறுத்து

உண்மை மற்றும் நல்லிணக்கம் தொடர்பில் ஆணைக் குழுஒன்றைஉருவாக்குவதற்கு ஆளும் தரப்பு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. ஆனால் அதனை நம்புவதற்குத் தமிழ் மக்கள் தயாராக இல்லைஎன்றுஇலங்கைத் ☞ 2

## இது இனி ரகசியம் அல்ல!

அன்னை பூபதி நினைவு தினம் பின்னர் சித்திரா பௌர்ணமி நாள்களில் கூ-ட்டுவதற்குத் திட்டமிடப்பட்டு கூடாமலேயே போன இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் மே 19 வவுனியாவில் நடக்கும் என்று இப்போது அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

அதாவது மாவை சேனாதிராசா தலைமையிலான கட்சியின் பழைய மத்திய குழுவே கூட்டப்பட இருக்கின்றது. தமிழ்ப் பொது வேட்பாளர் தொடர்பில் மே 4 யாழ்ப்பாணத்தில் நடந்த கூட்டத்தில், கட்சியின் முடிவைக் கேட்டு அறிவிப்பதாக அதில் கலந்துகொண்டிருந்த மாவை தெரிவித்திருந்தார். அந்தப் பின்னணியிலேயே இப்போது கட்சியின் மத்திய குழுக் கூட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மாவையர் சொன்னதன்படி பார்த்தால், பொது வேட்பாளர் தொடர்பான தமிழ் அரசுக் கட்சியின் முடிவை மே 18க்கு முன்னர் அவர் அறிவித்திருக்கவேண்டும். ஆனால், அதற்காகக் கூட்டத்தைக் கூட்டினால் அது முள்ளிவாய்க்கால் ☞ 2

# சட்டத் திருத்தம் நடைமுறைக்கு

*குற்றவியல் நடவடிக்கை முறைச்சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலத்தை மே 3 சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன சான்றுரைப்படுத்தியிருக்கிறார் என்று பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ச நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.*

*இந்தச் சட்டமூலம் 2024 ஏப்ரல் 24 கடும் விவாதத்தின் பின்னர் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இதற்கமைய குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் 2024/25ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமாக மே 3 முதல் நடைமுறைக்கு வந்திருக்கிறது.*

# தேர்தல் கட்டுப்பணத்தை அதிகரிக்கக் கடும் எதிர்ப்பு

தேர்தல் வேட்பாளர்களின் கட்டுப்பணத்தை நியாய மற்ற முறையில் அதிகரிக்க எதிர்ப்பு தெரிவித்து முன்னிலை சோசலிசக் கட்சி தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவரிடம் மனு ஒன்றைக்கையளித்துள்ளது.

தேர்தல்களில் போட்டியிடும் உரிமையை செல்வந்தர்களுக்கு மட்டும் ☞ 8

# பொருளாதார மீட்சிக்கு செயலில் எதுவுமில்லை

## நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவிப்பு

பொருளாதார மீட்சிக்கு உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாக ஆளும்தரப்புபேச்சளவில் குறிப்பிடுகிறது.ஆனால் செயலளவில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை என்று தேசிய மக்கள் ☞ 2

# விஸா கட்டண அதிகரிப்புக்கு நாடாளுமன்ற அனுமதி எங்கே?

## சபையில் லக்ஸ்மன் கிரியெல்ல கேள்வி

வெளிநாட்டுச் சுற்றுலாவிகளுக்கான விஸா நடைமுறைக் கட்டணங்கள் அதிரிக்கப்பட்டமைக்கு நாடாளுமன்றத்தின் அனுமதி பெறப்படவில்லை என்று எதிர்க்கட்சி பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை முன்வைத்து உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அந்த ஒழுங்குப் பிரச்சினையில், வெளிநாடுகளில் இருந்து வரும் ஒருவரிடமிருந்து அறவிடப்படும் விசா கட்டணத்தை அதிகரிக்க நாடாளுமன்றத்தில் அனுமதிக்கப்பட்டது. ஆனால் வீ.எப்.எஸ். என்ற தனியார் நிறுவனத்திற்காக மேலதிகமாக 20, 21 டொலர் அறவிடப்படுகிறது. இதற்கு நாடாளுமன்றத்தில் அனுமதி பெறப்படவில்லை. அவ்வாறு அதற்கு நாடாளுமன்றத்தின் அனுமதி பெறப்படவேண்டும் என்றால் அதனை தனியாகச் சமர்ப்பித்திருக்க வேண்டும்.

ஆனால் விசா கட்டண அதிகரிப்புக்காக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணையுடன் சட்ட விரோதமான முறையில் இணைத்து இதனை அனுமதித்துள்ளது. அதனால் நாடாளுமன்றத்தை பிழையாக வழிநடத்தியமைக்காக நிலையியற் கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேநேரம் சேவை கட்டணத்தை அதிகரிப்பதற்கு அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டதாகவும் அதனால் அதனை நாடாளுமன்றத்தில் அனுமதிக்க தேவையில்லை எனவும் அமைச்சர் தெரிவிப்பது பிழையான விடயமாகும். நிதி தொடர்பான அதிகாரம் ☞ 2

# சிறு விவசாயத்தை நவீனமயப்படுத்த போர்த்துக்கல் நிறுவனத்துடன் ஒப்பந்தம்

சிறு விவசாய நவீனமயப்படுத்தல் திட்டத்தில் போர்த்துக்கல் நிறுவனத்துடன் ஆளும் தரப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளது என்று ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜேவர்தன தெரிவித்தார்.

இலங்கையின் காலநிலை மாற்ற செயலகம் சார்பாக காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜேவர்தன, காலநிலை இடர்மன்றம் சார்பாக அதன் பொதுச் செயலாளர் முன்னாள் மாலைதீவு ஜனாதிபதி மொஹமட் நஷிட் மற்றும் போர்த்துக்கலின் அஜித் நிவாட்கப்ரால் நிறுவனம் சார்பில் அதன் பிரதம நிறைவேற்று அதிகாரி கார்லோஸ் கோமஸ் ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

விவசாய விளைச்சல் மற்றும் விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கும் நோக்கத்துடன் மேம்படுத்தப்பட்ட மற்றும் நிலைபேறான விவசாய முறைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் இலங்கையில் உள்ள கிராமப்புற ☞ 8

# வெலிக்கடைச் சிறை மறியலில் உள்ள முன்னாள் போராளி பட்டினிப் போராட்டம்

## நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேரில் பார்த்த பின் தகவல்

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு குற்றச்சாட்டுக்கள் எதுவும் சுமத்தப்படாது தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் போராளி ஒருவர் வெலிக்கடைச் சிறைச்சாலையில் பட்டினிப் போராட்டத்தைத் தொடங்கியுள்ளார் என்று யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிறீதரன் மற்றும் கஜேந்திரன் ஆகியோர் தெரிவித்தனர்.

கொழும்பில் வைத்துக் கடந்த பெப்ரவரி மாதம் கைது செய்யப்பட்டவர் வவுனியாவைச் சேர்ந்தவரான முன்னாள் போராளி செல்வநாயகம் ஆனந்தவர்ணன். பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் விசாரணைக்கு என அழைக்கப்பட்ட அவர் பின்னர் கைது செய்யப்பட்டார்.

அதேபோன்று மூதூரைச் சேர்ந்த சுதாகரன் என்பவரும் இந்தியாவில் இருந்து நாடு திரும்பும்போது கைது செய்யப்பட்டார். ஒருவருடத்திற்கும் மேலாக நீதிமன்றில் முற்படுத்தப்படாமல் அவரும் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இவர்கள் இருவரையும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிறீதரன் மற்றும் கஜேந்திரன் ☞ 8

# பொருளாதாரக் கொள்கைகள் மாறினால் மீண்டும் நெருக்கடி

## மத்திய வங்கி ஆளுநர் மீள எச்சரிக்கை

நாட்டில் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பொருளாதாரக் கொள்கை மாற்றமடைந்தால் மீண்டும் நெருக்கடியான நிலைமைகள் ஏற்படலாமென மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க மீண்டும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கை மத்திய வங்கியில் நீடித்த ஸ்திரநிலை என்ற தொனிப்பொருளில் நேற்று நடைபெற்ற ஊடகச் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துவெளியிடும்போதே அவர் இதனைத் தெரிவித்தார், முதலாவது பொருளாதார விபரிப்பு தொடர்பில் தெளிவுபடுத்தப்பட்டது.

நாட்டின் பொருளாதாரம் படிப்படியாக மீண்டும் வழமைக்கு திரும்புகின்றன ☞ 2

# பெருந்தோட்ட நிறுவனங்கள் ஜனாதிபதியுடன் சந்தித்து பேச்சு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் பெருந்தோட்ட நிறுவனங்களின் சம்மேளனத்துக்கும் இடையிலான சந்திப்பொன்றுநடைபெற்றுள்ளது.

அதேபோன்று குறித்த சம்மேளனத்துக்கும் தொழில் அமைச்சர் மனுஷ நாணயக் காரவுக்கும் இடையிலும் சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது.

இந்தச் சந்திப்புக்களின் போது தோட்டத்தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்புக்காக ஏற்கனவே முன்மொழியப்பட்டுள்ள உற்பத்திக்கு ஏற்றால் போன்று ஊழியம் வழங்கும் பரிந்துரையைச் சீர்தூக்கிப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளதாக பெருந்தோட்ட நிறுவனங்கள் சம்மேளனத்தின் ஊடகப்பேச்சாளர் ரொஷான் இராஜதுரை தெரிவித்தார்.

எமது முன்மொழிவினை ஏற்றுக் கொண்டால் தொழிலாளி ☞ 8

# அதானியின் காற்றாலை மின் உற்பத்தி நிலையத்துக்கு அமைச்சரவை அனுமதி

## ஒப்பந்தம் இறுதியாகின்றது

மன்னார் மற்றும் பூநகரி பிரதேசத்தில் 484 மெகாவோல்ட் காற்றாலைமின்னுற்பத்தி நிலையத்தை அபிவிருத்தி செய்வதென அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் அதானி கிறீன் எனர்ஜி எஸ்.எல். நிறுவனத்தினால் மன்னார் மற்றும் பூநகரி பிரதேசத்தில் காற்றாலைமின்னுற்பத்தி நிலையங்களை அபிவிருத்தி செய்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்கு 2022.03.07 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

அதற்கமைய, குறித்த நிறுவனத்தால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கருத்திட்ட முன்மொழிவை மதிப்பீடு செய்வதற்காக ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

நினைவேந்தல் வாரத்துக்குள் மாட்டிக்கொள்ளும்என்பதால்இந்தத் தடவைஉசாராகமுள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தினம் முடிந்த மறுநாள் கூட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஆக மொத்தத்தில் எப்போதும் போல் மாவையர் சொன்ன சொல்லைக் கடைப்பிடிக்கப்போவதில்லை, பொதுவேட்பாளர் பற்றிய அவரது கட்சியின் முடிவை அவர் இரு வாரங்களுக்குள் அறிவிக்கப்போவதில்லை. மே 19 கூட்டத்திலும் இது பற்றி ஒரு தீர்க்கமான முடிவு எடுக்கப்படுமா என்பது கேள்விக்குறிதான். ஏனெனில்ஏற்கனவேநாடாளுமன்ற உறுப்பினர்களான சம்பந்தன், சுமந்திரன், சார்ள்ஸ் நிர்மலநாதன், சாணக்கியன் ஆகியோர் பொது வேட்பாளர்தெரிவைஎதிர்க்கிறார்கள். அதாவது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களில்பெரும்பாலானோர் எதிர்க்கிறார்கள். நாடாளுமன்ற உறுப்பினர்களில் கட்சியின் தெரிவு செய்யப்பட்ட தலைவரான சிறீதரன் மட்டுமே அதற்கு ஆதரவு தெரிவித்திருக்கிறார். மாவையரும் இதுவரை பகிரங்கமாக ஆதரவு தெரிவிக்கவில்லை என்றாலும் ''ஒற்றுமை'' கோசத்தின் கீழ் அதனை ஆதரிக்க மறுக்கமாட்டார் என்று எதிர்பார்க்கலாம். இந்த நிலையில் ஒரே கூட்டத்தில் கட்சி இந்த விடயத்தில் ஒரு முடிவுக்கு வருமாஎன்பதுசந்தேகத்துக்குரியது.

அதற்கு மற்றொரு காரணமும் உண்டு. கட்சியின் வழக்குத் தொடர்பான விவகாரம் இழுபட்டுக் கொண்டே செல்கின்றது. தெரிவு செய்யப்பட்ட தலைவர் இன்னும் பதவியேற்பதற்கான வழியைக் காணவில்லை. திருகோணமலை வழக்கை வழக்காளியின் கோரிக்கைகளை முழுமையாக ஏற்றுக்கொள்வதன் மூலம் முடித்துக்கொள்ள முன்னரே முன்வைக்கப்பட்டயோசனையின்படி செயலாற்ற இந்தக் கூட்டத்தில் ஒரு இணக்கம் எட்டப்படவேண்டும். அத்தகைய ஒரு இணக்கத்துக்கு சுமந்திரனும்கூட ஒத்துவருவார் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது. இப்போது மாவையர் தரப்பிலிருந்து யாப்புத் தொடர்பில் நீதிமன்றில் முன்வைக்கப்பட்டுள்ள விடயங்களைக் கடந்து வழக்கு மே 31 மீண்டும் விசாரணைக்கு வரும்போது அதனை முடிவுக்குக் கொண்டுவரும் வழி பற்றி இந்த மத்தியகுழுக்கூட்டத்தில்முக்கியமாகக் கதைக்கப்படவேண்டியிருக்கிறது.

கூட்டத்தின் கடைசியில் ஒ--ரு இணக்கம் எட்டப்பட்டாலும் அதற்கு முன்னராக கடுமையான வாதப் பிரதிவாதங்களும் குற்றச் சாட்டுக்களும் அனல் பறக்கும் சாத்தியங்களே அதிகம் உள்ளன. வழக்கு இழுபட்டதற்கு ஒருவர் மீது ஒருவர் பழிசுமத்தி, சதிக் கோட்பாடுகளை முன்வைத்து, அதற்குப் பதிலடி வாங்கி என அதுவே ஒரு பெரும் அக்கப்போராக நீடிக்க இருக்கும் நிலையில் பொது வேட்பாளர் விடயம் விரிவாக ஆராயப்படுவதற்கான வாய்ப்புக் கேள்விக்குரியதே!

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## உண்மை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்அரசுக்கட்சியின்யாழ்ப்பாணம் மாவட்டநாடாளுமன்றஉறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'இந்த மே மாதத்துடன் போர் முடிவடைந்து 15 ஆண்டுகள் நிறைவடைகின்றன. இந்த நேரத்தில் இன்று (நேற்று) நாடாளுமன்றத்தில் வெளிவிவகார அமைச்சரின் தலைமையில்நல்லிணக்கத்துக்கான செயலணி தொடர்பான அரசு முன்மொழியும் சட்டமூலம் குறித்து கட்சித் தலைவர்களுடன் கலந்துரையாடப்பட்டது. இதிலே நான் சொன்ன சில விடயங்களை இந்தச் சபையில் பதிவு செய்வது அத்தியாவசியம்.

அதாவது போரின் இறுதிக் கட்டத்தில் விசேடமாகவும் பேரக் காலம் முழுவதும் பலவிதமான அத்துமீறல்கள் நடந்துள்ளன. உலகத்தில் நடக்கும் எந்தவொரு போரும் சுத்தமானது கிடையாது. சுத்தமான போர் என்று எதனையும் அழைக்க முடியாது. ஆனால், அவ்வாறு நடக்கும்போது அதனால் பாதிக்கப்படுபவர்களுக்கு நீதி வழங்கும் பொறுப்பு அரசுக்கு உள்ளது. அதாவது அத்துமீறல்கள் தொடர்பில் விசாரிப்பதில் - விசேடமாகக் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விடயத்தில் என்ன நடந்தது? யார் இதற்குப் பொறுப்பு? அவர்கள் உயிருடன் இருக்கின்றனரா? இல்லையா? என்ற விவரங்களை உறவினர்களுக்குத் தெளிவுபடுத்துவதும் அது தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுப்பதும் அரசின் பொறுப்பாகும்.

காணாமல்ஆக்கப்படுவதுபலரால் செய்யப்பட்டிருக்கலாம். ஆனால், சாட்சியங்களின் அடிப்படையில், கற்றுக்கொண்ட பாடங்களும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழுவுக்கு முன்னால் வழங்கப்பட்ட சாட்சியங்களின் அடிப்படையில் இறுதி இரண்டு நாட்களில் மூவாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள்அரசபடையினரிடம் சரணடைந்தனர் என்று அரசு நியமித்தஆணைக்குழுவினாலேயே சொல்லப்பட்டுள்ளது. அவர்களுக்கு என்ன நடந்தது என்பதனை வெளிப்படுத்த வேண்டியது அரசின் பொறுப்பாகும்.

இந்த விடயத்தில் பல ஆணைக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. கற்றுக்கொண்ட பாடங்களும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக் குழு, உடலகம ஆணைக்குழு, பரணகம ஆணைக்குழு போன்றவற்றில் பலவிதமான விடயங்கள் எடுத்துச் சொல்லப்பட்டு முன்மொழிவுகள் உள்ளன. எந்த முன்மொழிவும் இதுவரையில் நடைமுறைப் படுத்தப்படவில்லை.

இறுதியாக இந்த அனைத்து ஆணைக் குழுக்களின் முன்மொழிவுகளையும் ஆராய்வதற்காக இன்னுமொரு ஆணைக் குழு நியமிக்கப்பட்டது. அதன் முன்மொழிவுகளும் உள்ளன. இவை எவற்றையும் நடைமுறைப்படுத்தவில்லை. இவை அரசின் ஆணைக்குழுக்களாகும். இவற்றின் முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்தாது தற்போது இன்னுமொருநல்லிணக்கத்துக்காகச் செயற்படுத்தப்படும் செயலணி ஒன்று பிரேரிக்கப்பட்டுள்ளது. இவை எங்கள் மக்கள் மத்தியில் எந்தவிதமான நம்பிக்கையையும் கொடுப்பதாக இல்லை.

அவர்கள் சொல்லும் குறைபாடுகளுக்கு அவர்கள் முன்வைக்கும்குற்றச்சாட்டுகளுக்கும் ஒருஉள்ளகப்பொறிமுறைமூலமாக சரியான நீதி கிடைக்காது என்பதற்கு இந்த 15 வருட காலமாக எதுவுமே நடக்காமல் இருப்பதே சான்று. இன்னுமொரு செயலணியை அமைத்துச்செப்டெம்பரில்வரவுள்ள ஜெனிவாஅமர்வுக்குக்காண்பிக்கும் ஒருகண்துடைப்புநடவடிக்கையாக இதனைக் கொண்டு வருவதை நாங்கள் எதிர்க்கின்றோம்.

உள்ளூர் பொறிமுறையில் நீதி கிடைக்கமாட்டாது. எந்த நீதி விசாரணையாக இருந்தாலும் அது சுயாதீன விசாரணையாக இருக்க வேண்டும். ஒரு சுயாதீன விசாரணையாக இருந்தால் இந்தச் சந்தர்ப்பத்தில் அது சர்வதேச விசாரணையாக மட்டுமே இருக்க முடியும். காரணம் போரிட்ட இரண்டு தரப்பில் ஒரு தரப்பு அரச தரப்பே. ஆகவே, அந்த ஒருதரப்பில்போரிட்ட தரப்பினரே விசாரணை நடத்துவது அதுவிசாரணையேஅல்ல. சுயாதீன விசாரணையாக இருந்தால் அது சர்வதேசவிசாரணையாகமட்டுமே இருக்கும்என்றுநாங்கள்2009ஆம் ஆண்டுகாலத்தில்இருந்தேதிரும்பத் திரும்பக் கூறி வந்துள்ளோம்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் விசாரணை அறிக்கை 2015 நவம்பரில் வெளியிடப்பட்டது. அதுவொரு சர்வதேச விசாரணை அறிக்கை. அதனைத் தொடர்ந்து நீதிமன்றப்பொறிமுறைவேண்டும். குற்றஞ்சாட்டப்பட்டவர்கள்சட்டத்தின் முன்னால் நிறுத்தப்படவேண்டும். அது செய்யப்படவில்லை.

அத்துடன் ஒரு நிரந்தர அரசியல் தீர்வின்றிஎந்தவிதநல்லிணக்கமும் ஏற்படாது. இதனை உலகத்துக்கு வெளிச்சம் போட்டுக் காட்டுவோம். கடந்த ஆட்சிக் காலத்தில் நிரந்தர அரசியல் தீர்வை நோக்கி புதிய அரசமைப்பைச்செய்யும்பணியைச் செய்தோம். அதுவும் நிறைவேறாது அந்தரத்தில் விடப்பட்டது. ஆகவே, உண்மையான நல்லிணக்கம் ஏற்படவேண்டுமாக இருந்தால், அது கண்துடைப்பற்றதாக இருக்க வேண்டுமென்றால் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு வழங்கப்படவேண்டும். இந்த அத்துமீறல்கள் தொடர்பில் நீதி செயற்படுத்தப்படவேண்டும். இவை அனைத்தும் நடப்பதற்கு உகந்தசூழ்நிலைஇருக்கவேண்டும்.

ஆனால், உகந்த சூழ்நிலை இப்போது கிடையாது. நில ஆக்கிரமிப்புகள் நடக்கின்றன. தொல்லியல் திணைக்களத்தாலும் வேறுதிணைக்களங்களாலும்இவை நடக்கின்றன. பௌத்த மயமாக்கல், சிங்கள மயமாக்கல் போன்றவை நடந்துகொண்டிருக்கநல்லிணக்கம் பற்றிய ஆணைக்குழுவொன்றை நியமிப்பதுஎன்பதுஒருசிரிப்புக்குரிய விடயமாகத்தான் எங்கள் மக்களால் பார்க்கப்படும்.

போர் முடிவடைந்து 15 வருடங்களாகியும் எவ்விதமான நடவடிக்கையும் எடுக்கப்படாது பொறுப்புக்கூறல் தொடர்பில் சர்வதேசவிசாரணை பொறிமுறை நடந்துள்ளது. ஆனால், சர்வதேச நீதிமன்றப் பொறிமுறை ரோம் சட்டத்தின் மூலம் மட்டுமே நடத்தப்படும். இந்நிலையில், இலங்கை அரசுக்கு எங்களின் சிபாரிசாக ரோம் சட்டத்துக்கு நீங்கள் உங்கள்இணக்கத்தைக்கொடுங்கள். நாங்கள் ஐ.நா.வில் உறுப்பினரே. இந்த நாட்டுக்குள் எது நடந்தாலும் அது சர்வதேச குற்றமாகவே இருக்கின்றது. அது தொடர்பில் சர்வதேசத்துக்குப்பொறுப்புஉள்ளது. அது தொடர்பான பொறிமுறை நடைமுறைப்படுத்தப்படவேண்டும். சர்வதேச நீதிமன்றப் பொறிமுறை ரோம் சட்டத்தின் மூலம் மட்டுமே நடத்தப்படும். எனவே, இலங்கை அரசு ரோம் சட்டத்துக்கு இணங்க வேண்டும் -என்றார்.

## அதானியின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சரவையால் பேச்சு உடன்பாட்டுக்குழுநியமிக்கப்பட்டது.

அந்தக் குழுவின் விதந்துரைகளின்படி உத்தேசக் கருத்திட்டத்தின் கீழ் உற்பத்தி செய்யப்படும் மின்னலகொன்றை கிலோ வாற் மணிக்கு 8.26 சதம் அமெரிக்க டொலர் பெறுமதிக்குக் கொள்வனவு செய்ய இணங்கப்பட்டுள்ளது.

20வருடங்களுக்கு மின்சாரத்தைக் கொள்வனவு செய்வதற்கான விலை மனுக்கோரலை அதானி கிறீன் எனர்ஜி எஸ்.எல். இற்கு வழங்குவதற்கும், மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

முன்னதாக மன்னார் மாவட்ட சிவில் அமைப்புக்களும், சமயத் தலைவர்களும்பொதுமக்களுக்கும் அதானி நிறுவனத்தின் கற்றாலை திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். ஆளும் தரப்பு அதனைப் பொருட்படுத்துவதாக இல்லை.

## பொருளாதார....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சக்தியின்நாடாளுமன்றஉறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற பிரிவிடல் (திருத்தச்) சட்டமூலம் மற்றும் வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடல் (விசேட ஏற்பாடுகள்)திருத்தச் சட்டமூலம்(பராட்டே)என்பனமீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் தேசிய பொருளாதாரத்தில் சிறு மற்றும் நடுத்தர கைத்தொழில் முயற்சியாளர்கள் 52 சதவீதமளவில் பங்களிப்பு செய்கிறார்கள். தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு தொழில் முயற்சியாளர்கள் பொறுப்புக் கூற வேண்டிய தேவை கிடையாது. ஆனால்அவர்கள்மீதேபொருளாதார நெருக்கடிசுமத்தப்பட்டுள்ளது. ஆளும் தரப்பின் தவறான பொருளாதார கொள்கைகளினாலும் ஊழல் மோசடியாலும் நாடு வங்குரோத்து நிலையடைந்தது.

கொவிட் பெருந்தொற்றினால் பொருளாதாரம் பாதிக்கப்பட்டது என்று ஆளும் தரப்புக் குறிப்பிடுகிறது. ஆனால் கொவிட் பெருந்தொற்றினால் எமது அண்டைநாடுகளான மாலைத்தீவு, பங்களாதேஷ் மற்றும் பூட்டான் உள்ளிட்ட நாடுகள் வங்குரோத்து நிலையடையவில்லை. பொருளாதார மீட்சிக்கு உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாகஆளும்தரப்பு பேச்சளவில் குறிப்பிடுகிறது. ஆனால் செயலளவில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை.

வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் சட்டமூலம் தற்காலிகமானதே, 7 மாதங்களை வரையறுத்தே நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. ஏழு மாத காலத்துக்குள் நாடு பொருளாதார ரீதியில் முன்னேற்றமடையுமா என்பதைகுறிப்பிட முடியாது, ஆகவே தொழில் முயற்சியாளர்களுக்கு 2 ஆண்டுகளேனும் நிவாரணம் வழங்க வேண்டும்.

வெளிநாட்டவர்களுக்கு விசா விநியோகத்தில் இடம்பெறவிருந்தத பெரும்மோசடியைஇளைஞர்ஒருவர் தனித்து வெளிப்படுத்தியுள்ளார். அரசமைப்பினால்வழங்கப்பட்டுள்ள பேச்சுரிமையை அந்த இளைஞர் பயன்படுத்தியுள்ளார். இந்த இளைஞன் குறிப்பிட்ட விடயங்கள் சமூக வலைத்தளங்களில் வெளியாகி, அதற்கு மக்கள் அவதானம் செலுத்தியதன் பின்னரே அமைச்'சரவை பழைய முறைக்கு விசா விநியோகிக்க தீர்மானித்துள்ளது.

ஆளும் தரப்புத் தவறுகளை திருத்திக்கொள்ளவேண்டும்அதனை விடுத்து இந்த இளைஞனுக்கு நெருக்கடிகளை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டால் சட்டத்தரணிகளும், நாட்டு மக்களும் அந்த இளைஞனுக்கு சார்பாக செயற்படுவார்கள். கடந்த கால நிகழ்வுகளையும் ஆளும் தரப்பு நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும் என்றார்.

## விஸா கட்டண....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத்துக்கு மட்டுமே இருக்கின்றது. அதனால் இந்தச் சேவைக் கட்டணத்தை அதிகரிப்பதற்கு நாடாளுமன்றத்தின் அனுமதியைப் பெறவேண்டும்.

மேலும் ஒரு சுற்றுலாவியிடமிருந்துவீ.எப்.எஸ். கட்டணமாக 18.50 டொலர் அறவிடப்படுகிறது. இந்தப் பணம் ஆளும் தரப்புக்குக் கிடைப்பதில்லை. மாறாகவீ.எப்.எஸ். நிறுவனத்துக்கே செல்கிறது. வருடத்துக்கு 2மில்லியன் சுற்றுலா பயணிகள் நாட்டுக்கு வருகின்றனர். அதன்படி 40 மில்லியன் அமெரிக்க டொலர் கிடைக்கப்பெறுகிறது.

அவ்வளவு அந்நியச் செலவணியை இழக்கும் வகையில் ஆளும்தரப்புதீர்மானம்எதிர்வரும் தேர்தல்வேலைத்திட்டத்துக்கு இந்த பயணத்தை பயன்படுத்துவதற்காக என்ற சந்தேகம் எழுகிறது.

நாடாளுமன்றத்தை பிழையாக வழிநடத்திமேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கை தொடர்பாக நிலையிற் கட்டளைகளின்பிரகாரம்நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

## பொருளாதாரக்....

(இரண்டாம்பக்கத் தொடர்ச்சி)

என்று தெரிவித்த அவர், சர்வதேச நாணய நிதியத் திட்டத்துடன் இணக்கம் காணப்பட்ட இலக்குகள் என்பன ஆளும் தரப்பால் முன்வைக்கப்பட்டவை என்றும் குறிப்பிட்டார்.

ஆளும்தரப்பு சர்வதேசநாணய நிதியத்துடன்இணங்கியுள்ளகுறித்த

தொடர்ச்சி 8ம் பக்கம்....



காலைக்கதிர் Kalaikkathir

# மன்னார் தேசிய பாடசாலைகளில் தொடரும் ஆசிரியர் பற்றாக்குறையால் கல்வி பாதிப்பு



மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக தேசிய பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவி வருகின்ற நிலையில் உயர்தர பாடங்களை கற்பிக்க ஆசிரியர்கள்



இன்மையால்உயர்தரகல்விநடவடிக்கைபாதிப்படைந்துள்ளதாக மன்ஃபுனித சவேரியார் ஆண்கள் மற்றும் பெண்கள் கல்லூரி அதிபர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக விரைவில் நடவடிக்கை மேற்கொண்டு தேசிய பாடசாலைகளில் காணப்படும் ஆசிரியர் வெற்றிடங்களை நிவர்த்தி செய்து தருமாறு கோரி திங்கட்கிழமை அப்பாடசாலைகளின் அதிபர்கள், பழைய மாணவர்கள் இணைந்து வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாவட்ட அரசாங்க அதிபரிடம் மகஜர் ஒன்றை கையளித்துள்ளனர்.

குறிப்பாக நீண்டகாலமாக நிலவிவரும் ஆசிரியர் வெற்றிடம் காரணமாக உயர்கல்வி பிரிவுகளை நடத்த முடியாத நிலை காணப்படுவதாகவும் சில கற்கைகளுக்கான முழுமையான ஆசிரியர் பற்றாக்குறை காரணமாக பாட நெறியை நிறுத்தவேண்டிய நிலை காணப்படுவதாகவும் இந்த மகஜரில் தெரிவித்துள்ளனர்.

மேலும், அவர்கள் மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ற வகையில் தளபாடங்கள் இல்லை எனவும் தற்காலிகமாகப் பலகைகளை இணைத்தே சில வகுப்பு மாணவர்களுக்கு கற்பித்தல் செயற்பாடுகள் இடம்பெறுகின்றன எனவும் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் மாணவர்களுக்கான கட்டட தேவைகள் அதிகமாக காணப்படுவதாகவும், சில கட்டடங்கள் அமைச்சுக்களின் நிதி ஒதுக்கப்பட்டு பகுதியளவில் மாத்திரம் கட்டப்பட்டு அரைகுறை



நிலையில் காணப்படுவதாகவும், இதனால் பாடசாலை நிர்வாகம் பல சவால்களை எதிர்கொள்வதாகவும் தெரிவித்து இந்த விடயங்களில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசாங்க அதிபர் இணைந்து தீர்வைப் பெற்றுத்தரக் கோரி இந்த மகஜரைக் கையளித்துள்ளனர்.

வட மாகாணத்தில் நிர்வாக ரீதியாக காணப்படுகின்ற குறைபாடுகள், இட மாற்றங்களில் காணப்படும் குறைபாடுகள், கல்வி நிர்வாக நடவடிக்கையில் காணப்படும் அரசியல் தலையீடுகள், மத்திய அமைச்சின் கீழ் காணப்படும் பாடசாலைகள் மற்றும் மாகாண சபையின் கீழ் காணப்படும் பாடசாலைகள் என்கிற பாகுபாட்டால் பல பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை, தளபாட பிரச்சினை, வெண்கட்டி தேவைகள் என்பவற்றை தொடர்ச்சியாக எதிர்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

# சம்மாந்துறை கல்விப் புலத்தில் புதிய நியமனங்கள் வழங்கல்





(வி.ரி.சகாதேவராஜா)

சம்மாந்துறை வலயத்தில் இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரிகளின் இடமாற்றம் காரணமாக ஏற்பட்ட



வெற்றிடங்களுக்கு புதிய நியமனக் கடிதங்களை வலயக்கல்விப் பணிப்பாளர் வைத்தியர் உமர் மௌலானா வழங்கி வைத்தார்.

சம்மாந்துறை வலய நிர்வாகத்திற்கு பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் பி.எம்.யசீர் அரபாத் மொகைடீன் இதனை அறிவித்தார்.

கல்விமுகாமைத்துவபிரதிகல்விப் பணிப்பாளராக எச்.நைரூஸ்கான் நியமிக்கப்பட்டுள்ளார். ஏலவே இப்பதவியை அலங்கரித்த திருமதி நிதர்ஷினி மகேந்திரகுமார் மட்டக்களப்பு வலயத்திற்கு இடமாற்றலாகிச் சென்றதையடுத்து இவ் வெற்றிடம் ஏற்பட்டது.

அதேவேளை, கல்வி அபிவிருத்திக்கான பிரதிக் கல்விப் பணிப்பாளராக பி.பரமதயாளன் நியமிக்கப்பட்டுள்ளார்.ஏலவே இப்பதவியை அலங்கரித்த ஏ.எல். அப்துல் மஜீத் அக்கரைப்பற்று வலயத்திற்கு இடமாற்றலாகிச் சென்றதையடுத்து இவ்வெற்றிடம் ஏற்பட்டது. திட்டமிடல் பிரிவு பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ஏசி.நுஸ்ரத்நிலோபராசம்மாந்துறை கோட்டக்கல்விப்பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.ஏலவே இப்பதவியை அலங்கரித்த ஏ.நசீர் திருக்கோவில் வலயத்திற்கு இடமாற்றலாகிச் சென்றதையடுத்து இவ்வெற்றிடம் ஏற்பட்டது.(05)

# சாதனை புரிந்த மல்வத்தை மாணவி ஜினோதிகாவிற்கு ஊக்குவிப்பு உதவி



(வி.ரி. சகாதேவராஜா)

சம்மாந்துறை கல்வி வலயத்திலிருந்துஇம்முறையும்தேசியமட்ட ஒலிம்பியாட் (கணிதம்) போட்டியில் தெரிவாகியுள்ள மல்வத்தை விபுலானந்தா மகா வித்தியாலய சாதனை மாணவி சிவரூபன் ஜினோதிகாவிற்கு ஊக்குவிப்பு



உதவி வழங்கி வைக்கப்பட்டது.

லண்டன் கற்பகப்பிள்ளையார் ஆலய சபையின் இலங்கைக்கான இணைப்பாளரும்இலங்கைஅகிலன் பவுண்டேசனின் உதவிப்பணிப் பாளருமான கலாநிதி விஆர். மகேந் திரனிடம் உதவிக் கல்விப் பணிப் பாளர் வி.ரி.சகாதேவராஜா விடுத்த வேண்டுகோளுக்கு அமைய இந்த ஊக்குவிப்புஉதவிவழங்கிவைக்கப் பட்டது.

இந்தியாவின் ஸ்ரீமத் பரசமய கோளறிநாதர்ஆதீன39ஆவதுகுரு மகாசந்நிதானபீடத்தலைவர்புத்தாத் மானந்தசரஸ்வதிசுவாமிகள்அதனை மாணவிக்கு வழங்கி வைத்தார்.

அச்சமயம் அதிபர் திருமதி கௌசல்யா ஞானேஸ்வரன், சமூக செயற்பாட்டாளர்களான முன் னாள் தவிசாளர் கலாநிதி கிருஷ்ண பிள்ளை ஜெயசிறில், தா. பிரதீபன் ஆகியோரும்சுவாமிகளின்இந்தியப் பிரதிநிதிகளும் மாணவியின் பெற்றோரும்கலந்துகொண்டார்கள்.

இம்முறை தெரிவான மற்று மொரு மாணவி மதுஸ்காவிற்கும் இந்த உதவி இவ்வாரம் வழங்கி வைக்கப்படும் என வீஆர் மகேந்திரன், பணிப்பாளர் சகாவி டம் உறுதியளித்தார். (05)

# மன்னார் பொதுவைத்தியசாலைக்கு 60 கோடி ரூபாய் நிதி நன்கொடை

## வழங்க இந்திய அரசு அனுமதி

மன்னார் பொது வைத்தியசாலைக்கு 60 கோடி ரூபா நிதியை நன்கொடையாக வழங்க இந்திய அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது.

இலங்கையிலுள்ளஇந்தியஉயர்ஸ்தானிகராலயத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைக்கு அமைய இந்த அனுமதி கிடைத்துள்ளது.

மன்னார் பொது வைத்தியசாலையின் விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவுக்கான கட்டட நிர்மாணப் பணிகளுக்கும், மருத்துவ உபகரணங்களைப் பெற்றுக்கொள்வதற்குமாக இந்த 60 கோடி ரூபா நன்கொடை பயன்படுத்தப்படவுள்ளது.

வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸின் நெறிப்படுத்தலின் கீழ், மாகாண சபையால் திட்ட முன்மொழிவுதயாரிக்கப்பட்டுசுகாதாரஅமைச்சின்ஊடாக கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்திடம் விண்ணப்பம் சமர்பிக்கப்பட்டது.

இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட இந்திய அரசாங்கம் 60 கோடிமில்லியன்ரூபாநன்கொடையை வழங்குவதற்கான அனுமதியை அளித்துள்ளது.

மன்னார் பொது வைத்தியசாலையில் விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு இன்மையால் மக்கள் பல துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

இவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கும் முகமாக வடக்கு மாகாண ஆளுநரால் இந்திய அரசாங்கத்திடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(05)

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# தேவை உண்மையான நடவடிக்கை வெறும் கண்துடைப்பு நாடகமல்ல

உண்மை மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழு ஒன்றை மீண்டும் நிறுவுவதற்கான ஆயத்தங்களில் ஆளும் தரப்பு மும்முரம் காட்டுவதை நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் நேற்றுத் தனது உரையில் சுட்டிக்காட்டியிருக்கிறார். இந்தக் குழுவுக்கான முன்மொழிவை நாடாளுமன்றத்தில் முன்வைப்பது தொடர்பில் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் ஆளும் தரப்பு விவாதித்துள்ளது. அதனை அடுத்தே இதுவொரு கண்துடைப்பு நடவடிக்கை என்று சுமந்திரன் தனது உரையில் விமர்சித்திருந்தார்.

இதுவிடயத்தில் சுமந்திரன் தனது உரையில் பகிர்ந்திருந்த பல விடயங்கள் அச்சொட்டாக உண்மையானவை. அதில் காலைக்கதிருக்கு மாற்றுக் கருத்துக்கள் இல்லை என்பதால் அது இங்கே அப்படியே தரப்படுகின்றது.

''இந்த விடயத்தில் பல ஆணைக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. கற்றுக்கொண்ட பாடங்களும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழு, உடலகம ஆணைக்குழு, பரணகம ஆணைக்குழு போன்றவற்றில் பலவிதமான விடயங்கள் எடுத்துச் சொல்லப்பட்டு முன்மொழிவுகள் உள்ளன. எந்த முன்மொழிவும் இதுவரையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

இறுதியாக இந்த அனைத்து ஆணைக் குழுக்களின் முன்மொழிவுகளையும் ஆராய்வதற்காக இன்னுமொரு ஆணைக் குழு நியமிக்கப்பட்டது. அதன் முன்மொழிவுகளும் உள்ளன. இவை எவற்றையும் நடைமுறைப்படுத்தவில்லை. இவை அரசின் ஆணைக்குழுக்களாகும். இவற்றின் முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்தாது தற்போது இன்னுமொரு நல்லிணக்கத்துக்காகச் செயற்படுத்தப்படும் செயலணி ஒன்று பிரேரிக்கப்பட்டுள்ளது. இவை எங்கள் மக்கள் மத்தியில் எந்தவிதமான நம்பிக்கையையும் கொடுப்பதாக இல்லை.

அவர்கள் சொல்லும் குறைபாடுகளுக்கு அவர்கள் முன்வைக்கும் குற்றச்சாட்டுகளுக்கும் ஒரு உள்ளகப் பொறிமுறை மூலமாக சரியான நீதி கிடைக்காது என்பதற்கு இந்த 15 வருட காலமாக எதுவுமே நடக்காமல் இருப்பதே சான்று. இன்னுமொரு செயலணியை அமைத்துச் செப்டெம்பரில் வரவுள்ள ஜெனிவா அமர்வுக்குக் காண்பிக்கும் ஒரு கண்துடைப்பு நடவழக்கையாக இதனைக் கொண்டு வருவதை நாங்கள் எதிர்க்கின்றோம்'' என்று அவர் தெரிவித்திருக்கிறார்.

உள்ளூர் பொறிமுறையில் நீதி கிடைக்கமாட்டாது. எந்த நீதி விசாரணையாக இருந்தாலும் அது சுயாதீன விசாரணையாக இருக்க வேண்டும். ஒரு சுயாதீன விசாரணையாக இருந்தால் இந்தச் சந்தர்ப்பத்தில் அது சர்வதேச விசாரணையாக மட்டுமே இருக்க முடியும். காரணம் போரிட்ட இரண்டு தரப்பில் ஒரு தரப்பு அரச தரப்பே. ஆகவே, அந்த ஒரு தரப்பில் போரிட்ட தரப்பினரே விசாரணை நடத்துவது, அது விசாரணையே அல்ல. சுயாதீன விசாரணையாக இருந்தால் அது சர்வதேச விசாரணையாக மட்டுமே இருக்கும்'' என்றும் அவர் கூறியுள்ளார். காலைக்கதிரின் நிலைப்பாடும் அதுவே. தொடர்ந்து பல வருடங்களாக நாம் இதனையே வலியுறுத்தி வந்திருக்கின்றோம்.

இடம்பெற்ற போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் குறித்து சர்வதேச விசாரணை மட்டுமே தமிழர்களின் கோரிக்கை, எதிர்பார்ப்பு. உள்ளகப் பொறிமுறைக்கு ஐ.நாவால் இலங்கைக்கு வழங்கப்பட்ட வாய்ப்பையும் அது பயன்படுத்தவேயில்லை என்பதால் இனியும் அரசின் உள்ளகப் பொறிமுறையை நம்பத் தமிழ் மக்கள் தயாரில்லை. உலக நாடுகளையும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையையும் ஏமாற்ற மற்றொரு ஆணைக்குழு அமைக்கப்படுவதையும் தமிழ் மக்கள் எதிர்க்கிறார்கள், நிராகரிக்கிறார்கள். ஆளும் தரப்பு தனது கண்துடைப்பு நாடகங்களை நிறுத்திக்கொண்டு, உண்மையான நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் சர்வதேச விசாரணைக்கு இணங்க வேண்டும். சிறுபான்மை இனமொன்றின் பிரதிநிதியாக இருப்பவரான அயலுறவுத்துறை அமைச்சரும் ஆளும் தரப்பின் கபட நாடகங்களுக்கு இதுவிடயத்தில் ஒத்தூதாமல் மனச்சாட்சிப்படி நடக்கவேண்டும்.

# கற்பகதரு என்னும் அற்புதம்
# இனிக்கும் பனை

அங்கம் – 40



மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா.

'கரும்பு தின்னக் கூலியா ' என்று கேட்பதை நாமனைவரும் அறி ந்திருப்போம்.கரும்பில் காணப்படும் இனிப்புச்சுவை தான் இப்படிக் கேட்டிட வைத்திருக்கிறதுஎன்பதுதான்உண்மையெனலாம். இனிப்பினை உண்டிட யாராவது கூலியைக் கேட்பார்களா என்னும் அடிப்படையில்த்தான் இவ்வாறு சொல்லுவது என்பது சமூகத்தில் இன்றுவரை ஓட்டிக் கொண்டி ருக்கிறது.இனிப்புச் சுவையென்றால் கரும்பைத்தான் கைகாட்டி நிற்போம். அந்தக் கரும்புதான் இனிப்பாய் மலர்ந்த சீனி யின் பிறப்பிடமாகும். ஆரம்ப காலத்தில் சீனியானது எங்கு செய்யபட்டது ? அதற்குச் சீனி என்ற பெயர் எப்படி அமை ந்தது ? என் றெல்லாம் பார்க்கின்ற வேளையிலே சீனதேசம் வந்து நிற்கிறது. சீனாவில் செய்யப்பட்ட படியால்த்தான் ' சீனி ' என்னும் பெயர் வந்திருக்கிறது என்று அறிய முடிகிறது. இதற்கு சரியான ஆதாரங்கள் உண்டா என்பது ஐயந்தான். ஆனாலும் சீனி என்ற பெயருக்கும் சீனா என்ற பெயருக்கும் இடையே உள்ள பொருத்தமொன்றே பெயருக்கான காரணம் என்று எடுத்துக் கொண்டால் சிக்கலுக்கு இடமே இல்லாமல் ஆகிவிடுகிறதல்லவா.







இலங்கையில் சீனி என்போம். இந்தியாவில் குறிப்பாகத் தமிழ் நாட்டில் சர்க்கரை என்றுதான் சொல்லுவார்கள். சர்க்கரை என்றால் இலங்கையில் கொள்ளும் அர்த்தம் வேறாகும். இனிப்பு என்ற வகையில் இச்சொற்களால் ஏற்படும் வித்தியாசத்தை ஒருபக்கம் வைத்துவிட்டு விஷயத்துக்கு வருவோம். ஆயுள் வேத நூல்கள் ' சர்க்கரை ' என்றே குறிப்பிடுகின்றன.சீனி என்பது ஆரம்பத்தில் தனியாக எடுக்காமல் மருந்துகளுடன் சேர்த்தே எடுக்கப்பட்டு வந்திருப்பதாக அறி கிறோம்.மருந்துடன் சேர்த்து எடுக்கப்பட்ட சீனி நாளடைவில் எல்லா விதமான உணவுகளுடன் இரண்டறக் கலந்து பிரிக்க முடியாத ஒன்றாகவே ஆகிவிட்டது.

இனிப்பு என்பது உடலின் இயக்கத்துக்கு இன்றியமையாததுதான். உடலின் உழைப்புக்கு ஏற்ப உணவும் அமைதல் மிக வும் முக்கிய மானதாகும்.உழைக்கும் பொழுது உடலின் சக்தியில் இழப்பு ஏற்படுகிறது. அந்த இழப்பினை ஈடுகட்ட உணவுதான் கைகொடுத்து நிற்கும். உணவினை எடுக்கும்பொழுது அங்கு சீனியும் தேவைப்படுகிறது. சீனியும் உண வுடன் இணைவதால் , உடம்புக்கு நல்ல சக்தியும், ஊக்கமும் ஏற்படுகிறது. இதனால்த்தான் ஓடியாடும் சிறுவர்கள், விளையாட்டுவீரர்கள், உடலைவருத்தி உழைக்கும் தொழிலாளர்கள், போர் முனையில் நிற்கும் வீரர்கள், யாவருக்கும் சீனி கலந்த பானங்கள், தின்பண்டங்கள் கொடுக்கப்படுகின்றன என்பதைக் கருத்திருத்தல் வேண்டும். சீனி என்பது மனித வாழ்வில் முக்கியத்துவம் மிக்கதாகவே இருக்கிறது.சீனி என்னும் பொழுதுதான் சிக்கலே வந்து நிற்கிறது. கருப் பஞ் சீனியா, பனஞ்சீனியா என்று ! எது மிகவும் இன்றியமையாதது என்று பார்க்கும் வேளையில் ' பனஞ் சீனி' முன் வந்து நிற்கிறது. தற்கால மருத்துவ ஆய்வுகளின்படி பனஞ்சீனியே சிறப்புடையது என்னும் கருத்து வெளியாகியிருக்கிறது.உடலின் ஆரோக்கியத்துக்கும் பனஞ்சீனிதான் உகந்தது என்றும் சொல்லப்படுகிறது. கருப்பஞ் சீனியைப் பயன்படுத்தும் அத்தனை வழிகளிலும் பனஞ்சீனியைப் பயன்படுத்தலாம் என்று இத்துறையில் ஆற்றலுள்ள வல்லுனர்களை தெரிவிக்கிறார்கள்.

சீனியை அனைத்துக் குடிபானங்களிலும் பயன்படுத்துகிறோம். கொண்டாண்டங்களின் பொழுது செய்யப்படும் விதம்விதமான பலகாரங்கள், அத்தனைக்குமே சீனியையே முக்கியமாக்கி செய்து சுவைத்தும் மகிழ்கிறோம். லட்டு, மைசூர் பாகு, ஜிலேபி, பூந்தி, கேசரி, பால்க்கோவா, பாயாசாசம், என்று பலகார வகைகள் நீண்டு கொண்டே போகும். அதுமட்டு மல்ல மேல்நாட்டு முறையில் தயாராகும் பட்சணங்களையும் இதில் அடக்கலாம். அத்தனையிலும் சீனி பயன்படுத்

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# கற்பகதரு என்னும் அற்புதம் இனிக்கும் பனை



4ம் பக்கத் தொடர்ச்சி..........

தப்படுகிறது. அதற்குப் பதிலாகப் பனஞ்சீனியையும் பயன்படுத்தலாம் என்பதை கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். இனிப்புச் சுவையினைத் தருவதோடு உடல் ஆரோக்கியத்துக்கும் பனஞ்சீனி கைகொடுத்து நிற்கும் என்பதை அனைவ ருமே கவனத்தில் கொண்டிடுதல் மிகவும் முக்கியமாகும்.

பதனீரைப் பயன்படுத்தி பனங்கட்டி வந்தது.இப்பொழுது பனஞ்சீனியும் வந்திருக்கிறது. பனஞ்சீனி இலங்கையிலும் உற்பத்தி செய்யப்பட்டது. இந்தியாவிலும் உற்பத்தி செய்யப்பட்டது. பனங்கட்டியினைச்செய்யும்முறையிலிருந்து சற்று வேறுபட்டு பனஞ்சீனி செய்யும் முறை அமைகிறது. பனம்பாணியினைக் காய்ச்சும் விதத்திலும் பின் அதனை இறுகச் செய்து பதப்படுத்தும் முறையிலும் சில வேறுபாடுகள் இருப்பதுதான் முக்கியம் எனலாம். மூலம் என்பது பதனீரே ஆகும்

யாழ்ப்பாணத்தில் பிரித்தானியர் காலத் திலே பனஞ்சீனிக் கென்று ஒரு தொழிற்சா லையானது பொலிகண்டிப் பகுதியில் அமைக்கப் பட்டிருந்ததாம்.இங்கு பனஞ்சீனி செய்வதற்கான பதனீரினை – உடுப்பிட்டி, கொற்றாவத்தை, பருத்தித்துறை, சிங்கைநகர், போன்ற இடங்களில் பெற்று , குழாய் மூலமாக பொலிகண்டியில் அமைந்திருந்த பனஞ்சீனித் தொழிற் சாலைக்கு கொண்டு வந்திருப்பதாகச் செய்திகள் வாயிலாக அறிய முடிகிறது. இப்படியாகப் பெறப்பட்ட பதனீரின் மூலம் பனஞ்சீனி உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது என்னும் செய்தி மிகவும் காத்திரமான செய்தியாகவே இருக்கிற தல்லவா ! அந்தத் தொழிற்சாலை அங்கு இருந்திருக்கிறது என்பதற்கான எச்சங்கள் இன்றும் இருப்பதாக வடமராட்சி மக்கள் தெரிவிக்கிறார்கள் என்பது மனங்கொள்ளத்தக்கது.

பிரித்தானியர் காலத்தின் தொடர்ச்சியோ தெரியவில்லை. மீண்டும் பொலிகண்டியில் பனஞ் சீனித்தொழில் ஆரம்பிக்கப் பட்டிருக்கிறது. பொலிகண்டியில் தொடங்கப்பட்ட பனஞ்சீனிச் செய்கை பெரும் வெற் றியைக் கண்டிருக்கிறது. அத்துடன் சண்டிருப்பாயிலும் பனஞ் சீனி செய்யப்பட்டி ருக்கிறது.பொலிகண்டியில் ஆரம்பிக்கப்பட்ட பனஞ்சீ னிச் செய்கையினைக் கண்ணுற்றதால் ஆர்வமேற்பட்டு திருவடி நிலை, மந்துவில், கரகம்பானை ஆகிய இடங்களில் முயற்சி எடுக்கப்பட்ட போதும் அது பொருந்தி வராமலே ஆகிவிட்டது,முயற்சி என்பது விடாமல் நடந்தபடி இருந்தது. இந்த நிலையில் 1971 ஆம் ஆண்டில் கீரிமலையில் ஆரம்பிக்கப்பட்ட பனம் பொருள் உற்பத்தி நிலையத்தில் சாத்தியமாகியது எனலாம். இலங்கையின் விஞ்ஞான சபையினரும், இலங்கையின் கைத்தொழில் அபிவிருத்திச் சபையினரும் இணைந்து எடுத்த முயற்சியினால் பனஞ்சீனி உற்பத்தி என்பது புத்துயிர்ப்பினைப் பெற்றது என்று அறியக்கூடியதாக இருக்கிறது.

இதன் தொடர்ச்சியாக யாழ்ப்பாணத்தில் பனஞ்சீனித் தொழிலானது முன் நோக்கிச் செல்லத் தொடங்கிய தெனலாம். 1972 - 1973 ஆண்டுகளில் சிங்கைநகர் பனம்பொருள் உற்பத்தி நிலையத்தால் பனஞ் சீனியின் உற்பத்தியானாது நல்ல வெளிச்சத்தைக் காட்டும் நிலைக்கு வந்தது.மக்களின் ஆதரவும் பெருகியது. 1974 - 1975 ஆம் ஆண்டு காலப்பகுதியில் யாழ் மாவட்டத்தில் பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் தொழிற்சாலைகள் எழுச்சி பெற்று பனஞ்சீனி உற்பத்தி சிறப்பான ஒரு நிலையினை அடைந்தது என்பது நோக்கத்தக்கதாகும்.இந்த வகை யில் சரசாலை, அச்சுவேலி, பருத்தித்துறை , சண்டிருப்பாய், மந்துவில், ஆகிய இடங்களில் பனஞ்சீனியை உற்பத்தி செய் வதற்காக பாரிய தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டன என்பதுதான் முக்கிய செய்தியாகும். சிறப்பாகச் செயற்பட்டு , நல்ல உற்பத்தியினையும் கொடுத்து , மக்களின் மனதிலும் இடம் பிடித்து நின்ற பனஞ்சீனித் தொழில் – ஆட்சியிலி ருந்த அரசின் கொள்கைகளாலும், நாட்டில் ஏற்பட்ட உள்நாட்டு யுத்தச்சூழ்நிலை காரணமாகவும், தொடரமுடியாத நிலைக்கு ஆளாகிவிட்டது என்பதும் நோக்கத்தக்கது.


இலங்கையில் பனஞ்சீனி உற்பத்தி என்று நோக்கும் பொழுது , இந்தியாவின் சீனித் தொழில் நிபுணரான பேராசிரியர் றாவ் பற்றிக் குறிப்பிட்டே ஆக வேண்டும்.இலங்கையின் சீனித் தேவைபற்றி அவர் ஆராய்ந்தார்.அதன்படிஅவர்பனஞ்சீனியைச்செய்வதையே பெரிதும் விரும்பினார் என்றுதான் அறியக் கூடியதாக இருக்கிறது.'சீனியை இறக்குமதி செய்வதால் ஏற்படும் சிக்கலிருந்து விடுபட வேண்டுமானால் , இயற்கை மூலவளங்களைப் பார்க்கவேண்டும். பனை யிலிருந்து தரமான பனங்கட்டி, பனஞ்சீனி செய்யலாம் ' என்று அவர் தன் மனக்கருத்தை வெளியிட்டிருக்கிறார். அத்துடன் அமையாது ' யாழ்ப்பாண மாவட்டத்தில் இருக்கின்ற பனை வளத்தைக் கொண்டு , நல்லதொரு பனஞ்சீனி ஆலையை ஆரம்பிக்கலாம் ' என்னும் அவரின் கூற்றும் மிகவும் முக்கியமானது என்பதைக் கருத்திருத்தல் வேண்டும். இந்திய நிபுணர் கூறியதோடு , அதற்கு வலுசேர்க்கும் வகையில் ஜேர்மனியின் பொருளாதார நிபுணர்களும் யாழ்ப்பாண த்தில் ' பாரிய சீனித் தொழிற்சாலையினை அமைக்கலாம் ' என்று அறிவுறுத்தியமையும் மனங்கொள்ளல் வேண்டும்.

தமிழ்நாட்டில்பனஞ்சீனியைத்தயாரிப்பதில்நிபுணத்துவம் மிக்கவர்கள் பலர் மாநிலம் தோறுமே இருக்கிறார்கள். பனஞ்சீனியின் பயன்பாடும் அங்கு இருக்கிறது.சித்த வைத்தியத்தைபெரிதாகஎன்னுகின்றவர்கள்பலர்இருக்கின்ற காரணத்தால் பனஞ்சீனி பற்றிய புரிதல் அங்கு இருக்கிறது.

நேச்சுரல் ஃபுட்ஸ் அண்ட் ஹெர்ப்ஸ் என்னும் பெயரில் ஒரு நிறுவனத்தைத் தமிழ்நாட்டைச்சேர்ந்த சரவணன் என்பவர் தொடங்கி இருக்கிறார். திருச்செங்கோட்டையைச் சேர்ந்த இவர் கணணித்துறையில் பட்டம் பெற்ற ஒரு பொறியியலாளராவார். இவரின் தாத்தா பனங்கட்டித் தொழிலில் ஈடு பட்டிருக்கிறார். இவரின் அப்பாவே ஒரு துணைக் கலெட்டராவார். தாத்தாவின் உணர்வு பேரனான சரவணனுக்குள் ஏற்பட்ட காராணத்தால் படித்த படிப்பினை ஒரு பக்கம் வைத்து விட்டு பனையின் பக்கம்

தொடர்ச்சி 7ம் பக்கம்...........

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா,
ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம்,
ரம்பொடை ஆஞ்சனேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்
பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்
5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road, Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swabpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# கற்பகதரு என்னும் அற்புதம் இனிக்கும் பனை



5ம் பக்கத் தொடர்ச்சி..........

வந்துவிடார்.இவரும்மனைவியுமாகஇணைந்துபனங்கட்டி, பனனஞ்சீனி , செய்வதில் ஈடுபட்டு நிற்கிறார்கள் என்பது நோக்கத்தக்கது. இவர்களின் விடா முயற்சியினால் பலரும் பயன் அடைகிறார்கள்.பனஞ்சீனியும் விற்பனைக்கு உகந்த விதத்தில் உற்பத்தி செய் யப்பட்டும். வருகிறது.

தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியம் சென்னையைத் தலைமை இடமாகக் கொண்டு செயற்பட்டு வருகிறது.இந்தஅமைப்பின்கீழ்பனைவெல்லஉற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள், இயங்குகின்றன. இந்தச் சங்கங்கள் வாயிலாக பனஞ்சீனி உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.

பனங்கட்டியைப் போலவே பனஞ்சீனியையும் பானங்களுக்கும், இனிப்பான பொருட்கள் செய்வதற்கும் பயன்படுத்த லாம். பனஞ்சீனியில் செய்ய்யப்படுகின்ற அத்தனையும் நல்ல சுவையினைத் தருவதோடு உடலின் ஆரோக்கியத்துக்கும் உறுதுணையாகவும் இருக்கும் என்பதுதான் முக்கியமாகும்.

பதனீரின் அவதாரங்களில் பனங்கற்கண்டு அதாவது கல்லாக்காரமும்ஒருநிலைஎனலாம். யாழ்ப்பாணத்தில்பெரும் பாலும் எல்லா வீடுகளிலும் பனங்கல்லாக்காரம் நிச்சயம் இருக்கும். அதற்குக் காரணம் அதன் பயன்மிக்க மருத்துவக் குணமேயாகும்.ஆயுள்வேதம், சித்த மருத்துவம் இரண்டுமே பனங்கற்கண்டை விதந்தே கூறுகின்றன. ஊட்டச்சத்துகள் நிறைந்திருப்பதாக இவை தெரிவிக்கின்றன. தொண்டையில் கரகரப்பு ஏற்பட்டவுடன் யாவரும் நாடுவது பனங்கற்கண்டையேயாகும். சங்கீதம் பாடுகிறவர்கள் பனங்கற் கண்டைமிகவும்பத்திரமாகவே வைத்திருப்பார்கள். குரலில் கர கர ப்பு வந்ததும் வாயில். போட்டு உமிழ்வார்கள். அடைப்பும் போய் குரலும் தெளிவாகிவிடும்.இருமலுக்கு மிகவும் உகந்த தாக கல்லாக்கரம் விளங்குகிறது.

கண்ணில் வெப்பம் காரணமாக சிவப்பாக மாறும் நிலை ஏற்படும் பொழுது கல்லாக்கரத்தை நீரில் கரைத்து கண் ணில் விட்டு விட்டால் அந்த நிலை மாறியே விடுகிறதாம் என்றும் கூறுவார்கள். கல்லாக்காரத்தில் மிளகினைக் கலந்து பயன்படுத்தி வந்தால் , எமக்கு வருகின்ற இருமல், சலக்கடுப்பு, தொண்டையில் வரும் கரகரப்பு,உள்நாக்கு வளரு தல் ஆகியன சுகமாகும் என்று அறியக்கூடியதாக இருக்கிறது.நோய்களைக் குணமாகும் . உடலைக் குளிர்மையாக வைத்திருப்பதற்கு பனங்கற்கண்டு உதவி நிற்கிறது.இதனால் சின்னமுத்து வந்தால் பனங்கற்கண்டையே கைலெடுத் தார்கள் என்பதும் நோக்கத்தக்தக்கது. தமிழ் நாட்டிலே குழந்தைகளுக்குப் பெயர் சூட்டும் விழாக்களிலும், சுபமுகூர்த்த வேளைகளிலும் வந்திருக்கும் உறவினர்களுக்கும் பனங்கற் கண்டைக் கொடுத்தும் மகிழுகிறார்கள் என்பதும் நோக்கத் தக்கதாகும்.

னங்கற்கண்டானது யாழ்ப்பாணத்தில் முன்னர் உற்பத்தியாகி இருந்த பொழுதும் , பனம் பொருள்களை நவீன முறை யில் உற்பத்தி செய்யும் வாகையில் கீரிமலையில் தொடங்கப்பட்ட உற்பத்தி நிலையத்தில்த்தான் பின்னர் செய்யப்பட்டதுஎன்றுஅறிகின்றோம்.எனினும்பனங்கற்கண்டு உற்பத்தியானது சீராக இருக்கவில்லை என்பதைத்தான் கருத்தி ருத்த வேண்டி இருக்கிறது.இலங்கைக்கு பனங் கற்கண்டின் தேவை மிகவும் வேண்டியே காணப்பட்டது. குறிப்பாக இலங்கையின் ஆயுள்வேதக் கூட்டுத்தாபனம் விரும்பியே நின்றது. இதனால் அதன் தேவையினைப் பூர்த்தி செய்ய இங்கு உற்பத்தி செய்யப்பட்ட பனங்கற்கண்டு போதாதிருந்தததால் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யும் அவசியம் ஏற்படலாயிற்று.

தமிழ்நாட்டில் திருநெல்வேலி மாவட்டத்தின் உடன்குடி, கொட்டங் காடு, சிறுநாடார் குடியிருப்பு, சாத்தான் குளம், அடைக்கல நாதபுரமும் , இந்தியாவின் வங்காளமும் பனங்கற்கண்டு உற்பத்தியில் முன்னணி வகித்திருந்தன என்பதும் நோக்கத்தக்கது. யாழ்பாணத்தில் பனைவள மிருந்தும் பனங்கற்கண்டை , இறக்குமதி செய்யும் நிலை ஏற்பட்டது என் பதை யாவரும் மனமிருத்தல் வேண்டும். பனங்கற்கண்டு மருத்துவப் பயன்பாடு மிக்கதாக அமைந்திருப்பதால் அதன் உற்பத்தியிலும் கவனம் செல்லுத்துவதில் அக்கறை கொள்ளுவது அவசியமேயாகும்.

பதனீரின் நிறைவாகக் கழிவுப் பாகு அமைகிறது. பெயர் என்னவோ கழிவுப் பாகு என்று இருந்தாலும் அதுவும் பய னையே அளித்து நிற்கிறது என்பதுதான் முக்கியமாகும்.இந்தக் கழிவுப் பாகில் ஊட்டச் சத்து இருக்கிறதாம்.பதனீரில் காணப்படுகின்ற சத்து கழிவுப் பாகில் வந்து சேருகிறதாம்.இதனுடை கறுப்பு நிறத்தால் இது மக்களால் ஒதுக்கப்படு கிறது.இப்பாகில் கந்தகம் கலந்து காணப்படுகின்ற காரணத்தால் அதனைப் பயன்படுத்தாமல் மக்கள் ஒதுக்கியே வைத் திருக்கிறார்கள்.இதனை உரிய முறையில் சுத்தீகரித்து எடுத்தால் சுவைமிக்கதான பாகினைப் பெறக்கூடியதாகவே இருக் கும். இப்படியான பாகினை பானங்களுக்கும் , இனிப்புப் பதார்த்தங்கள் செய்வதற்கும் பயன்படுத்தலாம் என்பதைக் கருத்திருத்தல் வேண்டும். மருத்துவத் துக்கும் கழிவுப் பாகு உதவி நிற்கிறது என்பதும் முக்கியமாகும்.

புகையிலை பதப்படுத்தலிலும் கழிவுப்பாகினைப் பயனாக்குகின்றனர்.பால் கறக்கும் மாடுகளுக்குக் கொடுக்கப்படும் , புண்ணாக்கு, புல்லு, தவிட்டுடன் கழிவுப் பாகினைக் கலந்து கொடுத்தால் பால் நன்றாகவே சுரக்குமாம். மற்றைய கால்நடைகளுக்கும் கொடுக்கும் பொழுது அவையும் சிறப்பாக உழைக்குமாம் என்பதும் நோக்கத்தக்கது.இவற்றை விடக் கட்டிடப் பயன்பாடு,எரி பொருள்,வினாகிரி உற்பத்தி என்ற வகையிலும் கழிவுப்பாகு பயனாகி நிற்கிறது என்பதும் நோக் கத்தக்கதாகும்.

**மேகவனலு மிகவீசும் சூரிகையா**
**லாகமுறு கனலு மாறுங்காண் - மோகனத்திற்**
**றங்கிவரு நீர்ச்சுருக்குந் தாதவெப்ப**
**முந்தணியு**
**மிங்குபனங் கற்கண்டுக் கே**

(இத்துடன் இந்தத் தொடர் நிறைவுக்கு வருகின்றது)

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557

காலைக்கதிர் Kalāikkathir

## பொருளாதாரக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயற்றிட்டத்தை தற்போதைய முறையில்தொடர்ந்தால்நிலையாகப் பேணமுடியும்என்று குறிப்பிட்டவர், இந்த விடயத்தில் தான் அதிகளவு கரிசனைகளைக்கொண்டிருக்கிறார் என்றும் தெரிவித்தார்.

தற்போதைய பொருளாதார கொள்கையில் மாற்றம் ஏற்பட்டால், மீண்டும் நெருக்கடியான கடினமான நிலை ஏற்படுவதற்கான சாத்தியம் உள்ளது. ஆகவே தற்போது முன்னெடுக்கப்படுகின்ற கொள்கை எதிர்காலத்திலும் நடைமுறைப்படுத்தப்படுவது அவசியம் என்றார்.

## வெலிக்கடைச்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியோர்தடுத்துநேற்றுசிறைக்குச் சென்று நேரில் சந்தித்துப் பேசினர்.

அப்போதே, ஆனந்தவர்ணன் பட்டினப்போராட்டத்தைத்தொடங்கி இரண்டுநாள்களாகியுள்ளன என்ற விடயம் தெரியவந்துள்ளது.

தனதுவிடுதலையைவலியுறுத்தி கடந்த இரண்டு நாட்களாக உணவுத்தவிர்ப்புப்போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாக ஆனந்தவர்ணன் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் தெரிவித்ததோடுதனதுவிடுதலைக்கு அழுத்தம்கொடுக்குமாறுகோரிக்கை விடுத்துள்ளார்.

தான்பொய்க்குற்றச்சாட்டுக்களின் கீழ்கைதுசெய்யப்பட்டு, நீதிமன்றில் தனது தரப்புக் கருத்துக்களை கூறுவதற்கான வாய்ப்புக்கள் எதுவும் வழங்கப்படாமலேயே விளக்கமறியிலில் வைக்கப்பட்டுள்ளதாகவும், அடுத்த வழக்குத் தவணை எப்போது என்றுகூடத் தெரியாத நிலையில் தன்னைத் தடுத்து வைத்துள்ளதாகவும் ஆனந்தவர்ணன்தெரிவித்துள்ளார்.

இந்தநிலையிலேயேஅவர்தனது விடுதலையைவலியுறுத்திபட்டினிப் போராட்டத்தை தொடங்கியுள்ளார் என்றுநாடாளுமன்றஉறுப்பினர்கள் தெரிவித்தனர்.

செய்யப்பட்டு கடந்த ஒரு வருடத்திற்கும் மேலாக தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தன்னையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு சுதாகரனும் தம்மிடம் கோரினார் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

## பெருந்தோட்ட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவர் 1800 ரூபாய் பணத்தைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புக்கள் காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டதோடு, நாளாந்த உற்பத்தியும் அதிகரிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

எமதுமுன்மொழிவுசம்பந்தமாக நடவடிக்கைகளைமுன்னெடுப்பதற்கு ஜனாதிபதி தொழில் அமைச்சருக்கு உரிய அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளதாகத்தெரிவித்த அவர் இது தொடர்பிலான இணக்கப்பாடு எட்டப்பட்டதன் பின்னாதான் வர்த்தமானி அறிவித்தல் தொடர்பில் அடுத்த கட்டத்துக்குச்செல்ல முடியும் என்றார்.

## சிறு விவசாய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமூகங்களின் வீட்டு விவசாயத்தை மேம்படுத்துவதை இந்த ஒப்பந்தம் நோக்கமாகக் கொண்டுள்ளது. இலங்கையில் உள்ள பல விவசாய நிலங்கள் தற்போது சிறிய அளவில் உள்ளன. எனவே, குறைந்த விளைச்சல் மற்றும் குறைந்த வருமானம்ஆகியவற்றால்இவர்கள் பாதிக்கப்படுகின்றனர்.

இதன்காரணமாக100மில்லியன் அமெரிக்கடொலர்முதலீட்டில்15,000 விவசாயிகளுக்குத் தேவையான ஒத்துழைப்பையும் தொழில்நுட்ப அறிவையும்வழங்கும்முன்னோடித் திட்டம் அனுராதபுரம் மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட உள்ளது. இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் உள்ளடங்கியுள்ளவிவசாயம்மற்றும் காடுவளர்ப்புத்திட்டங்கள், காலநிலை பாதிப்பு மன்றத்தின் ஆதரவுடன் இலங்கையால் வரையப்பட்ட காலநிலை தாங்கு திட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளன.

நிலையான விவசாயத்தின் மூலம் வலுவான ஏற்றுமதி பொருளாதாரத்தை உருவாக்க முடியும் என காலநிலை மாற்றம் தொடர்பானஜனாதிபதியின்சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜேவர்தன ஜனாதிபதி ஊடகமையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

நவீன விவசாயத்தை உருவாக்கும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின்வேலைத்திட்டத்தின் பிரகாரம், விவசாயத்திற்கான நவீன தொழில்நுட்பத்தை உருவாக்கும்வேலைத்திட்டத்திற்கு ஒத்துழைப்புவழங்கபோர்த்துக்கேய நிறுவனம் ஒன்று முதலீடு செய்ய முன்வந்துள்ளது. இது சுமார் 100 மில்லியன் அமெரிக்க டொலர்கள் முதலீடு.

இதற்காக அநுராதபுரம் மாவட்டத்தில்15,000குடும்பங்களும் 15,000 ஏக்கரும் ஏற்கனவே அடையாளம் காணப்பட்டுள்ளன. இதன் முன்னோடித் திட்டத்தில் 15 குடும்பங்களும் பதினைந்து ஏக்கர்களும்இணைக்கப்படவுள்ளன. ஒரு குடும்பத்திற்கு சுமார் 6000 அமெரிக்க டொலர்கள் செலவை முதலீட்டு நிறுவனம் ஏற்க ஒப்புக்கொண்டுள்ளது. இந்த ஒப்பந்தத்தின்படி அடுத்த 25 ஆண்டுகளுக்கு விவசாயத்திற்கு தொழில்நுட்பஉதவிவழங்கப்படும்.

விவசாயம் தொடர்பான நவீன தொழில்நுட்ப உபகரணங்களை வழங்குவதும் இத்திட்டத்தின் மூலம் செய்யப்படுகிறது. மேலும், விவசாயிகளுக்குபிரச்சினையாகஇருந்த அவர்களின் விளைச்சலுக்கான சந்தையும் உருவாக்கப்படும். இந்தத் திட்டத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை கொள்வனவு செய்ய முதலீட்டு நிறுவனமே ஒப்புக்கொண்டுள்ளது. தற்போது மிளகாய், தக்காளி, தர்பூசணி பயிர்ச் செய்கையில் கவனம் செலுத்தப்படுகின்றது.

எதிர்காலத்தில், ஏனைய பயிர்களின் உற்பத்தியில் கவனம் செலுத்தப்பட்டவுள்ளது. இந்த முன்னோடித் திட்டம் வெற்றியடைந்ததையடுத்து, ஏனைய மாவட்டங்களுக்கும்நவீனதொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தஆளும்தரப்புஎதிர்பார்க்கிறது. இந்த நவீன விவசாயத்தின் மூலம்ஏற்றுமதிப்பொருளாதாரத்தில் மாற்றத்தைஏற்படுத்தமுடியும். அதே சமயம் விவசாயிகளின் வாழ்க்கை நிலையை மேம்படுத்தவும் முடியும் என்றார்.

## தேர்தல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மட்டுப்படுத்தி தேர்தலில் போட்டியிடும் சாதாரண வேட்பாளர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக முன்னிலை சோசலிச கட்சியின் பரப்புரைச் செயலாளர் துமிந்த நாகமுவ தெரிவித்தார்.

அத்துடன்,ஜனாதிபதித்தேர்தலில் தமது கட்சி வேட்பாளர் ஒருவரை நிச்சயமாகக் களமிறக்கும் என்று குறிப்பிட்ட அவர் ஆளும் தரப்பு தற்போது எந்தத் தேர்தலை நடத்தவதென்பதில்தடுமாற்றமடைந்துள்ளதாகவும் கூறினார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



# திருக்கோவில் பிரதேசத்தில் 40 குடும்பங்களுக்கு இஸ்லாமிய ரீலீப் நிறுவனம் வாழ்வாதார உதவி




அம்பாறை மாவட்டம் திருக்கோவில் பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட கிராமங்களில் இருந்து 40 குடும்பங்களுக்கு இஸ்லாமிய ரீலீப் நிறுவனத்தினரால் சுயதொழில் முயற்சியான நிதி உதவிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வு திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் தலைமையில் திருக்கோவில் பிரதேச செயலகத்தில் இடம்பெற்று இருந்தது.

இந்த நிதியுதவி திருக்கோவில் பிரதேச செயலாளரின் கோரிக்கைக்கு அமைவாக பொருளாதாரத்தில் பாதிக்கப்பட்ட பாடசாலை செல்லும் பிள்ளைகள் உள்ள குடும்பங்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் இலங்கைக்கான இஸ்லாமிய ரீலீப் நிறுவனத்தின் ஊடாக கனடா இஸ்லாமிய ரீலீப் நிறுவனத்தின் நிதியுதவியுடன் இவ் வாழ்வாதார உதவிக்கான நிதி வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் 40 குடும்பங்களுக்கு ஒரு லட்சம் தொடக்கம் இரண்டு லட்சம் வரையான முதல் கட்ட நிதியுதவிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளதுடன் நிகழ்வில் திருக்கோவில் பிரதேச செயலக பிரிவுத் தலைவர்கள் இஸ்லாமிய ரீலீப் நிறுவனத்தின் பணியாளர்கள் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பயனாளிகள் எனப் பலரும் கலந்து கொண்டர்.(05)

# முன்னாள் இராணுவ சார்ஜன்ட் கடத்தி செல்லப்பட்டு கொலை

தெபுவனபெங்கமுவபிரதேசத்தில் முன்னாள் இராணுவ சார்ஜன்ட் ஒருவர் கடத்திச் செல்லப்பட்டுத் தாக்கி கொல்லப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர் .

அதே பகுதியில் வசிக்கும் 51 வயதுடைய முன்னாள் இராணுவ சார்ஜன்ட் ஒருவரே கடத்தப்பட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இவர் இருவரிடமிருந்து பணத்தைப் பெற்றுக்கொண்டு மோசடியில் ஈடுபட்டதன் அடிப்படையிலேயே இந்தக் கொலை இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர் .

இவரிடம் பணத்தை வழங்கிய இருவருமே இந்த கொலையைச் செய்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

சம்பவம்தொடர்பில்சந்தேகத்தின் பேரில் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை பொலிஸார் மெற்கொண்டு வருகின்றனர்.(05)

# வவுனியாவில் 5 கிலோ கஞ்சா வைத்திருந்த இளைஞன் கைது



வவுனியாவில் 5 கிலோ கிராம் நிறையுடைய கஞ்சா போதைப்பொருளுடன் நபரொருவர் அதிரடிப்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வவுனியா புளியங்குளம் விசேட அதிரடிப்படையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் திடீர் சோதனை ஒன்றை நடத்திய அதிரடிப்படையினர் வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் வைத்து திங்கட்கிழமை இரவு மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் ஒருவரை சோதனைக்குட்படுத்தியதில் சூட்சுமமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த 5 கிலோ 124 கிராம் நிறையுடைய கஞ்சா போதைப்பொருளை மீட்டுள்ளனர்.

வவுனியா செக்கட்டிப்பிளவு பகுதியை சேர்ந்த 26 வயதுடை இளைஞரே மேற்படி கைது செய்யப்பட்ட நபராவார். மேலதிக விசாரனைகளின் பின்னர் கைது செயப்பட்ட நபரை வவுனியா நீதிமன்றில் முன்னிலைப்படுத்த உள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். (05)

# உழைப்பாளர் தினத்தை முன்னிட்டு கத்தாரில் குருதிக் கொடை முகாம்











(நூருல் ஹுதா உமர்)

கத்தாரில் பல்வேறு சமூக சேவைகளை தொடர்ந்து செய்து வரும் வெளிநாட்டில் வாழும் தமிழர்கள் நல சங்கம், உழைப்பாளர் தினத்தை முன்னிட்டு கத்தார் ஹமாத் மருத்துவமனையுடன் இணைந்து மாபெரும் இரத்ததான முகாமை கத்தார் தோஹாவில் நடத்தியது.

இதில் ஹமாத் மருத்துவமனையின் மருத்துவ மேலாளர் திருமதி சாதிக்கா ஸ்மாயில் அப்பாஸ், அமைப்பின் தலைவர் தாகீர் அவர்களுடன் இணைந்து சிறப்புரையாற்றி முகாமை ஆரம்பித்து வைத்தார்.

மேலும் ஐ.சி.சி பொதுச் செயலாளர் மோகன் குமார், ஐ.சி.பி.எஃப் பொதுச் செயலாளர் வர்க்கி போபன், ஐ.சி.பி.எஃப் காப்பீடு மற்றும் சமூக நலன் தலைவர் அப்துல் ரகூப், தொழிலதிபர் யாழினி குமார், தி.மு.க அயலக அணி பொறுப்பாளர் திரு.மதன், ஸ்கை தமிழ் ஊடகத்தின் பணிப்பாளரும் ஊடகவியலாளருமான ஜே.எம் பாஸித் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.(05)

# நிதி நிறுவனம் ஒன்றிலிருந்து போதைப் பொருள்கள் மீட்பு

## தலவாக்கலையில் சம்பவம்



தலவாக்கலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தலவாக்கலை நகரிலுள்ள தனியாருக்கு சொந்தமான நிதி நிறுவனம் ஒன்றிலிருந்து கஞ்சா பொதிகள் கைபற்றப்பட்டுள்ளன.

பிரதேச மக்களால் தலவாக்கலை பொலிஸாருக்குக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து சம்பவ இடத்திற்குச் சென்றபோது கஞ்சா பொதிகளுடன் நிறுவனத்தில் பணியாற்றிய இருவர் சனிக்கிழமை கைது செய்யப்பட்டனர்.

மாதாந்த கொடுப்பனவைச் செலுத்தத் தவறிய முச்சக்கர வண்டி ஒன்றை அபகரித்து கொண்டு வந்த போது அந்த வாகனத்தில் குறித்த பொதிகள் இருந்ததாகவும், தமக்கும் அதற்கும் எவ்வித தொடர்பும் இல்லையென்றும் நிறுவனத்தில் பணியாற்றும் ஊழியர்கள் தெரிவித்ததாக விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அதனைத் தொடர்ந்து சம்பவத்துடன் தொடர்புடைய இருவரும் நுவரெலியா மாவட்ட நீதிவான் முன்னிலையில் ஆஜர் படுத்திய போது இருவரையும் பிணையில் விடுவித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# கண்ணகி அம்பாள் வைகாசி திருக்குளிர்த்தி ஆலோசனை சபைக் கூட்டம் நேற்று நடந்தது







(வி.ரி. சகாதேவராஜா)

வரலாற்றுப்பிரசித்திபெற்ற காரைதீவு ஸ்ரீகண்ணகை அம்மன் ஆலயத்தின் வருடாந்த வைகாசித்திங்கள் திருக்குளிர்த்திச்சடங்கு தொடர்பான ஆலோசனைக் குழுக் கூட்டம் நேற்று (செவ்வாய்க்கிழமை) காரைதீவு பிரதேச செயலாளர் சிவ. ஜெகராஜன் தலைமையில் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

அதன்போது பிரதேசசெயலாளர்சிவஜெகராஜன் சடங்கு தொடர்பில் சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர்கள் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் பலரிடமும் ஏற்பாடு தொடர்பாக கலந்துரையாடினார்.

அங்குதுறைசார்ந்தஅதிகாரிகளின்கருத்துக்களும் பெறப்பட்டன.

ஆலய தர்மகத்தா பிரதம பொறியியலாளர் பரமலிங்கம் இராஜமோகன், அனைவரும் இணைந்து இப்பெரும் சடங்கை நடாத்த அழைப்பு விடுத்ததுடன் நன்றியுரையுமாற்றினார்.

இறுதியில் இவ்வருடதிருக்குளிர்த்திவிஞ்ஞானம் வெளியிட்டு வைக்கப்பட்டது.

12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஊர்ப்பிரசித்தம் தொடர்பான பட்டய நிகழ்வு இடம்பெறும்.

சடங்குப் பெருவிழா எதிர்வரும் 13ஆம் திகதி திங்கட்கிழமை மாலை கடல்தீர்த்தம் எடுத்துவந்து திருக்கல்யாணக்கால் நடும் பைவத்துடன் ஆரம்பமாகின்றது.

இச்சடங்குப்பெருவிழா தொடர்ந்து 08தினங்கள் நடைபெற்று எதிர்வரும் 21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அதிகாலை 4.30மணிக்கு திருக்குளிர்த்தி பாடலுடன் நிறைவடையும்.

இரண்டாம்நாள்14ஆம்திகதிசெவ்வாய்க்கிழமை மாலை சடங்குப்பூஜையும் ஊர்சுற்றுக்காவியம் பாடலும் இடம்பெறும்.தொடர்ந்து புதன்கிழமை முதல் ஞாயிற்றுக்கிழமை வரை தொடர்ந்து பகல் ஒரு மணிக்கு பூசையும் மாலை 7மணிக்கு சடங்குப்பூசையும் ஊர்சுற்றுக்காவியம் பாடலும் இடம்பெறும்.

20ஆம் திகதி திங்கட்கிழமை காலை மடிப்பிச்சை எடுக்கும் நிகழ்வும் மாலை 3 மணிக்கு பொங்கலுக்கான நெற்குத்தும் வைபவமும் நடைபெறும்.

மறுநாள் செவ்வாய் அதிகாலை திருக்குளிர்த்தி பாடப்பெறும்.

எட்டாம் சடங்கு 27ஆம் திகதி மாலை 7மணிக்கு இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டது.

மேலும் இந்நிகழ்வில் கண்ணகி அம்மன் ஆலய வண்ணக்கர்கள், பரிபாலன சபையினர், பொலிஸ் உத்தியோகத்தர், சுகாதார பரிசோதகர், காரைதீவு பிரதேசத்தில் இயங்குகின்ற அனைத்து திணைக்கள உத்தியோகத்தர்கள், கலாசார உத்தியோகத்தர், ஊடகர்கள்,பொது அமைப்புக்கள், கழகங்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (05)

# நுவரெலியா – லவர்ஸ்லீப் விநாயகபுரம் மக்கள் 21 நாள்களாக நீரின்றி தவிப்பு



நுவரெலியா மாநகர சபைக்கு உட்பட்ட லவர்ஸ்லீப் விநாயகபுரம் மக்கள் கடந்த 21 நாள்களாக நீரின்றி பெரும் அசௌகரியங்களுக்கு முகங் கொடுத்துள்ளனர்.

இதனால் மக்கள் அன்றாடம் நீரின்றி தமது கடமைகளை செய்வதில் இன்னல்களைச் சந்திக்கின்றனர்.



பொதுவாக பாடசாலை செல்லக் கூடிய மாணவர்கள் தமது பாடசாலை சீருடையைக் கழுவுவதற்கு கூட நீரின்றி பாடசாலைக்கு செல்லாமல் நீர் தேடி அலையும் ஒரு துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

அதேபோல் நுவரெலியா மாநகர சபைக்கு அன்மித்த பகுதிகளில் இவ்வாறான நிலைமை காணப்படுகிறது.

தொடர்ச்சியாக நுவரெலியாவில் கடும் வெப்பமான காலனிலை காணப்படுவதால் விவசாய நடவடிக்கையும் பாதிப்படைந்துள்ளது. பெண்கள் தமது வீட்டு வேலைகளைச் செய்வதற்கு கூட தண்ணீர் இன்றி பெரும் அசௌகரியங்களுக்கு முகங் கொடுத்துள்ளனர்.

இது தொடர்பாக பல்வேறு சந்தர்ப் பங்களில் நுவரெலியா மாநகர சபை ஆணையாளருக்கு தெரிவித்திருந்த பொழுதும் இதுவரை அதற்கான நடவடிக்கையில்எடுக்கப்படவில்லைஎன இம்மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (05)

# திருமலை சிறுவர் அபிவிருத்தி நிதியத்தால் மாணவர்களுக்கு சைக்கிள் வழங்கல்







(ஹஸ்பர் ஏ.எச்)

மாணவர்களுக்கு சைக்கிள் வழங்கும் நிகழ்வு, திருகோணமலை மாவட்ட செயலகத்தில், சிறுவர் அபிவிருத்தி நிதியத்தின் ஏற்பாட்டில் நேற்று (செவ்வாய்க்கிழமை) நடைபெற்றது.

இலங்கை சிறுவர் நிதியத்திற்கு, ஜப்பான் சிறுவர் நிதியத்தால் வழங்கப்பட்ட சைக்கிள் , சிறுவர் நிதியத்தின் பங்காளரான சிறுவர் அபிவிருத்தி நிதியத்தின் ஊடாக மாணவர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

இந் நிகழ்வில் குச்சவெளி, கோமரங்கடவெல, மொரவெள பிரதேச செயலக பிரிவை சேர்ந்த அறுபது மாணவர்களுக்கு சைக்கிள் வழங்கப்பட்டதுடன் , பாடசாலை கல்வியை நிறைவு செய்த மாணவர்களுக்கான தொழிற்பயிற்சிக்கான காசோலைகளும் மற்றும் சுயதொழிலுக்கான காசோலைகளும்இதன்போதுவழங்கிவைக்கப்பட்டன.

திருகோணமலைசிறுவர்அபிவிருத்திநிதியத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி அரியரட்ணம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பிரதமவிருந்தினராக திருகோணமலை மாவட்ட செயலாளர் சாமிந்த ஹெட்டியாராச்சி, மேலதிக மாவட்ட செயலாளர் ஜே.எஸ்.அருள்ராஜ் ,மாவட்ட செயலக ஊழியர்கள், மாகாண கல்வி திணைக்கள அதிகாரிகள்,திருகோணமலைமற்றுதிருகோணமலை வடக்கு கல்வி வலய அதிகாரிகள் அதிபர்கள் மற்றும் பெற்றோர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.(05)

# மாவடிப்பள்ளி அரபுக் கல்லூரிக்கு முஷாரப் எம்.பி. நிதி ஒதுக்கீடு





(ஏயெஸ் மௌலானா

மாவடிப்பள்ளி மர்க்கஸ் சாஆத் இஸ்லாமிய்யா அரபுக் கல்லூரியின் அபிவிருத்திக்கு திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப் 07 லட்சம் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்துள்ளார்.

இந்த அரபுக் கலாசாலையை மேம்படுத்தும் பொருட்டு கல்லூரியின் அதிபர் மற்றும் நிருவாகத்தினர் விடுத்த வேண்டுகோளை ஏற்று தனது பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியிலிருந்து இத்தொகையை அவர் ஒதுக்கீடு செய்துள்ளார் என்று நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப் பாளர் ஏ.எம். அஸாம் மௌலவி தெரிவித்தார்.

இந்த நிதியின் ஊடாகத் தற்போது குறித்த வேலைத் திட்டப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார்.(05)

## கிளிநொச்சியில் விபத்து ஒருவர் பரிதாபச் சாவு

கிளிநொச்சி ஏ9 வீதி பரந்தன் பகுதியில் நேற்றிரவு இடம்பெற்ற வாகன விபத்தில் 27வயதுடைய ஒருவர் உயிரிழந்துள்ளார்.ஆடை தொழிற்சாலை ஊழியர்களை ஏற்றி சென்ற பஸ் வீதியால் நடந்து சென்றவர் வீதியை திடீரென கடக்க முற்பட்ட போது குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

பஸ்ஸின் சாரதி கைது செய்யப் பட்டதுடன். விபத்து தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.விபத்தில் வவுனியா நெலுங்குளத்தைச்சேர்ந்த இளைஞரே உயிரிழந்துள்ளார்.

சௌந்தரநாயகம் புவலரசன் -27வயது இலக்கம் 34,7 ஆவது ஒழுங்கை குகன்நகர் நெலும்குளம், வவுனியாவைச் சேர்ந்தவரே உயிரிழந்தவராவார். (05 - 113)

## அம்மாவின் கழுத்தை நெரித்தே கொன்றேன்

**யாழில் கைதான சிறுவன் வாக்குமூலம்**

அம்மாவின் கழுத்தை நானே நெரித்து கொலை செய்தேன் என 16 வயது சிறுவன் பொலிஸ் விசாரணைகளில் தெரிவித்துள்ளார் எனப்பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் தெல்லிப்பழை பகுதியில், கடந்த வெள்ளிக்கிழமை வீடொன்றில் இருந்து சந்தேகத்திற்கு இடமான முறையில் உயிரிழந்த பெண்ணின் சடலம் மீட்கப்பட்டது.

தெல்லிப்பழை பகுதியைச் சேர்ந்த ஹெனடிக் ஜஸ்மின் (வயது 37) எனும் பெண்ணே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அவர் தனது இரு பிள்ளைகளுடன் வசித்து வந்த நிலையில் அவரது கணவன் வெளிநாட்டில் வசித்து வருகின்றார்.

இந்நிலையில், கடந்த வெள்ளிக்கிழமை வீட்டில் தாயும் மகனும் மட்டுமே இருந்துள்ளனர்.

மறுநாள் பெண் உயிரிழந்த நிலையில் சடலமாகக் காணப் பட்டுள்ளார். பெண்ணின் மகனான 16 வயதுடைய சிறுவன் வீட்டில் இருந்து காணாமல் போயிருந்த துடன், வீட்டின் சுவர்களில் இரத்த கறைகளும் காணப்பட்டன.

அது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வந்த வேளை காணாமல் போன 16 வயது சிறுவனை திங்கட்கிழமை பொலிஸார் கைது செய்திருந்தனர்.

கைது செய்யப்பட்ட சிறுவனிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணையில், தானே தாயின் கழுத்தை நெரித்து கொலைசெய்தேன்என வாக்குமூலம் அளித்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சிறுவனை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

அதேவேளை, சிறுவன் மன நலம் பாதிக்கப்பட்டவர் என அயலவர்கள் தெரிவித்துள்ளனர். சிறுவன் கைபேசி விளையாட்டுக்களுக்கு (மொபைல் கேம்ஸ்) அடிமையானவர் எனவும், அதனால் சிறுவன் கடுமையான மன உளைச்சலுக்கு உள்ளாகி இருந்தார் என கடந்த 05 ஆம் திகதி பொலிஸ் ஊடக பேச்சாளர் தெரிவித்து இருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (05)



காலைக்கதிர் Kalaikkathir

# யாழ். போதனா வைத்தியசாலைக்குள் அத்துமீறி நுழைந்து கும்பல் அடாவடி

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குள் அத்துமீறி நுழைந்து குழப்பத்தில் ஈடுபட்ட கும்பலை கைது செய்வதற்கு யாழ்ப்பாண பொலிஸார் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

விபத்தில் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட இளைஞன் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இளைஞனின் உயிரிழப்பை அடுத்து , அவரின் நண்பர்கள் எனதம்மை அடையாளப்படுத்திக்கொண்ட சுமார் 20 பேர் கொண்ட கும்பல் ஒன்று வைத்திய சாலைக்குள் அத்துமீறி நுழைந்து அடாவடியில் ஈடுபட்டதுடன், மருத்துவர்கள், தாதியர்கள், நோயாளிகளுடன் முரண்பட்டனர்.

அது தொடர்பில் மருத்துவ சேவைக்கு இடையூறு ஏற்படுத்தினர் என வைத்தியசாலை நிர்வாகத்தினரால், யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்துள்ள பொலிஸார் அடாவடியில் ஈடுபட்டவர்களை இனம் கண்டுள்ளனர்; எனவும், அவர்களை கைது செய்ய நடவடிக்கை எடுத்து உள்ளனர் எனவும் தெரிவித்துள்ளனர்.(05)

# அதிக வெப்பத்தால் இதுவரை யாழ்ப்பாணத்தில் 5 பேர் சாவு

## வைத்திய நிபுணர்கள் தகவல்;




அதிக வெப்பத்தால் ஏற்பட்ட வெப்ப பக்கவாத நோய் காரணமாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஒரு விடுதியில் கடந்த வாரத்தில் மாத்திரம் நான்கு முதல் ஐந்து வரையான இறப்புக்கள் பதிவாகியுள்ளதென வைத்திய நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் திங்கட்கிழமை இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

தற்பொழுது அதிகரித்துள்ள வெப்பநிலை காரணமாக உடலின் வெப்பநிலை அதிகரித்து வெப்ப பக்கவாதம் ஏற்படக்கூடிய வாய்ப்பு உள்ளது.

வெப்ப பக்கவாதம் மூலம் எமது விடுதிகளில் அனுமதிக்கப்பட்டிருந்த பல நோயாளிகளை இழந்து இருக்கின்றோம். இனிவரும் காலங்களிலும் வெப்பநிலை அதிகரித்துச் செல்லக்கூடிய வாய்ப்பு காணப்படுகின்றது. எனவே, வெப்பநிலை அதிகரிப்பை தடுக்கும் நோக்கில் அதிகளவிலான மரங்களை நடவேண்டும்.

பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பொருள்களின் பாவனையைத் தவிர்க்க வேண்டும்.

பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் பாவனைகளின் அதிகரிப்பு மற்றும் அதிகளவிலான மரங்கள் அழிப்பு என்பனவற்றின் மூலம் தான் தற்பொழுது வெப்பநிலை அதிகரித்து காணப்படுகிறது. எனவே மக்கள் அனைவரும் வீட்டுக்குவீடு மரங்களை நட்டு சுற்றாடலை குளிர்மையாக வைத்திருக்கவேண்டும்.

அதிக நீர் மற்றும் குளிர்மையான பானங்களை அருந்த வேண்டும்.

கடந்த இரு வாரங்களில் வெப்ப பக்கவாதம் காரணமாக எமது நோயாளர் விடுதிகளில் சேர்க்கப்பட்டிருந்த நான்கு தொடக்கம் ஐந்து நோயாளிகளை இழந்து இருக்கின்றோம்.

இந்த நோய் வராமல் இருப்பதற்கு அதிக நீரை அருந்த வேண்டும்.

வீட்டில் உள்ள வயோதிபர்கள் மற்றும் குழந்தைகளுக்கு போதிய நீர் ஆகாரங்களை வழங்கவேண்டும்.

தர்பூசணி,வெள்ளரிப்பழம்,தோடம்பம் போன்ற பழங்களை கூடுதலாக உண்ணக் கொடுக்க வேண்டும்.

வயது போனவர்களுக்கு தண்ணர் தாகம் எடுப்பது தெரியாது. எனவே நீர் ஆகாரங்களை தொடர்ச்சியாக வழங்க வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் உடலின் வெப்பத்தை குறைத்து வெப்ப பக்கவாதம் வாராமல் தடுக்கமுடியும். - என்றார்.(05)

# நுவரெலியா சீதையம்மன் ஆலயத்தின் கும்பாபிஷேகம்



நுவரெலியா சீதையம்மன் ஆலயத்தின் கும்பாபிஷேக நிகழ்வு எதிர்வரும் 17.05.2024 ஆரம்பித்து 19.05.2024 நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் இந்தியாவிலிருந்து சுமார் 2000 இற்கு மேற்பட்ட இந்திய உயர் விருந்தினர்கள் கலந்து கொள்ள உள்ளனர் இந்த விடயம் தொடர்பான கும்பாபிஷேக நிகழ்வுக்காக 17.05.2024 ஜனாதிபதியால் கொழும்பு மயூராபதி ஆலயத்தில் ஆரம்பிக்கப்படும் நுவரெலியா நோக்கிய ஆன்மீக ஊர்வலமாக சீதையம்மன் ஆலயத்திற்கு அழைத்து வரவுள்ளது எமது ஈழவள நாட்டின் இராமாயண வரலாற்றையும் இராமன் சீதையை வனவாசம் புகுந்த வரலாற்று இடமாக அமைந்து இருப்பது உலகம் அறிந்தது. அந்த வகையில் நடைபெற இருக்கும் சிறப்புமிக்க கும்பா அபிசேக நிகழ்வில் எமது ஈழவள நாட்டின் பக்த கோடி பெருமக்கள் வருகை தந்து சீதையம்மன் அம்பாள் அருள் பெறுக என்பது ஆலய பரிபாலன சபையின் அறிவித்தல் என்பது குறிப்பிடத்தக்கது. (05)

# பொது சுகாதாரப் பரிசோதகர் படுகொலை தொடர்புடையவர் கட்டுநாயக்கவில் கைது

பொது சுகாதார பரிசோதகர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் உட்பட பல கொலைகளுக்காகத் தேடப்பட்டு வந்த சந்தேகநபர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

வேறு ஒரு பெயரில் தயாரிக்கப்பட்ட போலி கடவுச்சீட்டைப் பயன்படுத்தி டுபாய்க்கு தப்பிச் செல்ல முயன்ற போதே இவர் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் திங்கட்கிழமை இரவு கைதானார்.

இவர் எல்பிட்டிய கரந்தெனிய பகுதியைச் சேர்ந்த 30வயதுடையவர் என்பதுடன் இவருடைய கடவுச்சீட்டு முக அங்கீகார முறைமை மூலம் அடையாளம் காணப்பட்ட பின்னரே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் இலங்கை இராணுவத்தின் கமாண்டோ படைப்பிரிவில் பணியாற்றி விட்டு வெளியேறியுள்ளமையும் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளதுடன் மேலதிக விசாரணைகளுக்காகக் கொழும்பு குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.(05)

# கை , கால்கள் கட்டப்பட்ட நிலையில் பெண் கொலை

வெலிகம பகுதியில் அமைந்துள்ள வீடொன்றில் பெண் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

திங்கட்கிழமை இரவு இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதுடன் 78 வயதுடைய பெண் ஒருவரே கொலை செய்யப்பட்டுள்ளார் .

உயிரிழந்த பெண் தங்கியிருந்த வீட்டுக்குள் இனந்தெரியாத சந்தேக நபர்கள் சிலர் புகுந்து வீட்டிலிருந்த பெறுமதியான பொருள்களைக் கொள்ளையிட்டுள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

பின்னர், வீட்டில் வைத்து பெண்ணின் கை , கால்கள் கட்டப்பட்ட நிலையில் இந்த பெண் கொலை செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த பெண் அவருடைய சகோதரி மற்றும் கணவருடன் வசித்து வருவதுடன் இருவரும் வெளியில் சென்ற போதே இந்தக் கொலை இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்த பெண்ணின் சடலம் பிரேத பரிசோதனைக்காக மாத்தறை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை வெலிகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(05)

# கிராம உத்தியோகத்தர்களுக்கு நியமனப் பட்டியல் வெளியீடு

3 இற்கான புதிய ஆட்சேர்ப்பு பட்டியல் திங்கட்கிழமை உள்நாட்டலுவல்கள் அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

3 ஆம் தர கிராம அதிகாரி ஆட்சேர்ப்புக்கான பரீட்சை மற்றும் நேர்முக பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் காலாண்டு பயிற்சிக்குத் தகுதி பெற்ற 1,942 விண்ணப்பதாரர்களின் பெயர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளதாகத் தெரிக்கப்படுகின்றது. உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பெயர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

கிராம உத்தியோகத்தர்களுக்கான புதிய நியமனப்பட்டியலில் உள்ளவர்கள் அனைவரும் மே மாதம் 8 ஆம் திகதி புதன்கிழமை காலை 10.30 மணிக்கு அலரிமாளிகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்தவின் பங்குபற்றுதலுடன் இந்த நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.(05)

# தடையற்ற மின்சார வழங்கலை நெடுந்தீவில் உறுதி செய்யுங்கள்

## துறைசார் தரப்பினருக்கு அமைச்சர் டக்ளஸ் பணிப்பு



நெடுந்தீவு பிரதேசத்தில் தடையற்ற 24 மணி நேர மின்சார வழங்கல் உறுதி செய்யப்பட வேண்டும் என துறைசார் தரப்பினருக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பணிப்புரை விடுத்துள்ளார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஏற்பாட்டில் பாரிய மின்பிறப்பாக்கிகள் மூலமாக நெடுந்தீவு மக்களுக்கு தடையற்ற பின்சாரம் இலங்கை பின்சார சபையின் மூலம் நீண்டகாலமாக வழங்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் கடந்த சில நாள்களாக நெடுந்தீவு பகுதியில் அடிக்கடி மின்சாரம் தடைப்பட்டதால் அப்பகுதி மக்கள் குறிப்பாகத் தற்போதைய அதி வெப்பமான சூழ்நிலையில் பல்வேறு அசௌகரியங்களை சந்திக்க நேரிட்டிருந்தது.

இதற்கு இயந்திரங்களில் ஏற்பட்ட தொழில் நுட்பக் கோளாறுகளே காரணம் என துறைசார் தரப்பினரால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த விடயம் யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்துக்கு கொண்டுசெல்லப்பட்டது.

இதையடுத்து துறைசார் தரப்பினருடன் குறித்த தடங்கல் தொடர்பில் தொலைபேசியில் கேட்டறித்துகொண்ட அமைச்சர் சீரமைக்கும் பணிகளை மிக விரைவாக முன்னேடுத்து தடையற்ற மின்சார வழங்கலை உறுதி செய்யுமாறு பணித்திருந்தார்.

இந்நிலையில் தற்போது குறித்த மின் பிறப்பாக்கிகள் சீர் செய்யப்பட்டு மின்சார சேவைகள் வழமைக்கு திரும்பியுள்ளன.

இவ்விடயம் தொடர்பில் கருத்து தெரிவித்த அமைச்சர் - தற்போது சாதாரண தர பரீட்சைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் நாட்டில் அதி வெப்ப நிலையும் காணப்படுகின்றது.

இதனால் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் பாதிக்கப்படும் ஏது நிலைகள் அதிகளவில் உள்ளன.

அதுமட்டுமல்லாது மக்களின் பல்வேறு வாழ்வாதார தொழில் நடவடிக்கைகளும் பிரச்சினைகளை சந்திக்க நேரிடும்.

இதேவேளை நாடு முழுவது இருளில் மூழ்கிய சந்தர்ப்பங்களில் கூட இப்பகுதியில் மின்சாரம் தடைப்பட்டது கிடையாது.

அந்தவகையில் எதுவித தடைகளும் ஏற்படாது வகையில் சேவையை வழங்குவது துறைசார் தரப்பினரது கடமையாகும்.

இதேநேரம் இப்பகுதியில் காற்றலை மின் உற்பத்திக்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அவை நிறைவுற்றதும் தடையற்ற மின்சாரத்துடன் குறைந்த செலவிலும் இப்பகுதி மக்கள்.மின்சார சேவையை பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு கிடைக்கும் என்றும் அமைச்சர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

காலைக்கதிர் Kalaikkathir




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.05.2024இல் வெளியிடப்பெற்றது